உ

குருபாதம்


# ஞானசம்பந்தம்

மலர் 31 | பரிதாபி - ஆவணி - 10—9—72 | இதழ் 10


திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## மறைஞான சம்பந்தர்

உயிர்கட்கு இயற்கையில் உள்ளது அஞ்ஞானத்தின் சம்பந்தம். அது நீங்க வேண்டுமாயின், ஞானத்தின் சம்பந்தம் இன்றியமையாதது. அஞ்ஞானம் - அறியாமை, ஞானம் - அறிவு. எண்ணில் அடங்காத உயிர்கள் அனைத்திலும் யாதோர் உயிரும் அஞ்ஞான சம்பந்தத்திற்கு விலக்கானதன்று. ஆகவே, ஓர் உயிர், தானாகவோ, அல்லது மற்றோர் உயிரின் துணையாலோ ஞானசம்பந்தத்தை அடைதல் இயலாது. 'ஓர் உயிர் மற்றோர் உயிர்க்கு ஞானத்தைத் தரும்' என்பது, 'ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்டுவான்' என்பதுபோலாகும். ஆகவே, உயிர்கட்கு ஞானத்தைத் தருபவன், இயற்கையிலே அஞ்ஞானத்தோடு சிறிதும் தொடர்பில்லாதவனாய் உள்ள இறைவனேயாம்.

இறைவன் உயிர்கட்கு ஞானத்தைத் தரும் முறை ஒரே வகையானதன்று; பல்வேறு வகையானதாம். அதற்குக் காரணம், உயிர்கள் யாவும் ஒரு தரத்தனவாகாமல், பல தரத்தனவாய் இருப்பதே.

" ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான்புகின் அளவில்லை; கிளக்க வேண்டா "*

என்று அருளிச்செய்தது இது பற்றியேயாகும்.

இறைவன், சிலருக்குத் தானேயும், சிலருக்குத் தனது அருள் பெற்ற அருளாளர் வழியும் ஞானத்தைத் தந்து, ஞான சம்பந்தம் பெறச் செய்கின்றான். தானே தருவதும் பல வகையாக நிகழ்கின்றது. ஆளுடைய பிள்ளையாருக்கு அம்மை யப்பராய்த் தோன்றி அம்மைதன் திருமுலைப்பால்வழி ஞானத்தை அளித்தான். ஆளுடைய அரசருக்குச் சூலை நோயைக் கொடுத்துப் பின் அதனை நீக்கிய முறையால் ஞானத்தை அருளினான். ஆளுடைய நம்பிக்கு ஓலை காட்டி வல்வழக்கிட்டு அடிமைகொள்ளும் முறையால் ஞானத்தை வழங்கினான். ஆளுடைய அடிகளுக்கு ஆசான் மூர்த்தியாய் எழுந்தருளி வந்து உபதேசம் செய்யும் முறையால் ஞானத்தைத் தந்தருளினான். இவர் எல்லாரும் ஞான சம்பந்தத்தைப்பெற்றவர்தாம். என்றாலும், ஆளுடைய பிள்ளையார் அருள்ஞானம் பெற்றதில் சில தனிச் சிறப்புக்கள் உண்டு. முதலாவது, உலகத் தொடர்பாகிய பந்தம் வந்து பற்றுதற்கு முன்னே மூன்றாவது ஆண்டின் தொடக்கத்தே ஞானத்திற்கு உரியராயினமை. இத்துணைப் பச்சிளம் பருவத்தே ஞானம் பெற்ற சிறப்பையே அவர் ஓரிடத்தில்,

" முன்னடைந்தான் சம்பந்தன் "

எனக் குறித்தருளுகின்றார். இரண்டாவதாக, 'அம்பிகை ஞானமே வடிவானவள்' என்றால், 'அவளது திருமுலைப் பால், ஞானமே யல்லது வேறில்லை' என்பது சொல்லவேண்டுமோ! எனவே, 'அருவமாகிய ஞானத்தை உருவமான பால்வடிவில் ஏற்று உண்டார் ஆளுடைய பிள்ளையார்' என்பது தெளிவு. இத்தகைய சிறப்பு, என்றும், யாரும் கண்டிராத - கேட்டிராத அதியற்புதச் செயலன்றோ! இதனைச் சேக்கிழார்,

" இப்படி ஒப்பதொர் அற்புதம் எங்குளது "

என்று அதிசயித்துப் பாடுகின்றார். எனவே, 'ஞான சம்பந்தர்' என்னும் திருப்பெயர் பிறருக்கு உரியதாகாமல், ஆளுடைய பிள்ளையார் ஒருவர்க்கே உரியதாயிற்று.

ஞான சம்பந்தரது முழுமையான திருப்பெயர் 'திருஞான சம்பந்தர்' என்பதே என்பதனை,

---

* திருமுறை - 3.

" காலத் தொகுதியும் நான்மறையின் காரணமும்
மூலப் பொருளும் முழுதுணர்ந்த — சீலத்
திருஞான சம்பந்தன் என்றுலகஞ் சேர்ந்த
ஒருநாமத் தால்உயர்ந்த கோ " *

என்பது முதலாக நம்பியாண்டார் நம்பிகள் பலவிடத்தும் அருளிய திருவாக்குக்களால் அறிகின்றோம். 'திருஞானசம்பந்தர்' என்பதில் 'திரு' என்பது பிள்ளையார்க்கு அடைமொழியாகாது, ஞானத்திற்கு அடைமொழியாய் நின்று, 'சிவம்' எனப் பொருள் தரும் என்பதனை, அவர் அப் பெயர் பெற்றமையைக் கூறுமிடத்தில் சேக்கிழார்,

" தேவருக்கும் முனிவருக்கும் தெரிவரிய பொருளாகும்
தாவில்தனிச் சிவஞான சம்பந்தர் ஆயினர் "

என்று விளக்கியருளினர். சிவஞானம் ஒன்றே, 'திருஞானம்' எனப்படும் என்பதைச் சிவஞான சித்தி,

" திருஞானம் இவையெல்லாங் கடந்தசிவ ஞானம் " $

என விளக்குகின்றது. எனவே, சிவஞானத்தை இறைவன் நேரே தோன்றிக் கட்புலனும் திருமுலைப் பால் வடிவில் கொடுத்தருளப்பெற்ற பிள்ளையார் ஒருவரே 'திருஞானசம்பந்தர்' எனத் திருப்பெயர் பெற்று விளங்குவராயினர். அத் திருப்பெயரைச் சேக்கிழாரும் அந்நாயனர் புராணத்தில்,

" சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர் "

" பன்னிரண்டு பெயர்பெற்றுப் பரவியசொல் திருப்பதிகம்
தென்னவன்முன் னருள்செய்தார் திருஞான சம்பந்தர் "

" தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணிஅத னுட்புகுவார் "

என முதல், இடை, கடை என்னும் மூன்றிடங்களிலும் போற்றிப் பொதிந்து வைத்தருளினர்.

சமயாசாரியருள் 'ஞானசம்பந்தர்' என்னும் திருப்பெயரைப் பெற்றவர் இவ்வாற்றல் திருஞான சம்பந்தராய் விளங்க, சந்தானசாரியருள் 'ஞானசம்பந்தர்' எனப் பெயர் பெற்றவர், சாமவேதிகளாய அந்தணர் குலத்தில் தோன்றி, அனைத்து

---

* ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை – கண்ணி - 67, 68.

$ சூ. 11-12.

வேதங்களையும் உணர்ந்திருந்த காரணத்தால் 'மறைஞான சம்பந்தர்' என விளங்கியவர். திருஞான சம்பந்தரும் தம்மைத் 'தமிழ்ஞான சம்பந்தன், கலைஞான சம்பந்தன், இசைஞான சம்பந்தன்' என்றாற்போலப் பல வகையில் குறிக்கும் முறையில் 'மறைஞான சம்பந்தன்' எனவும் குறித்துள்ளாராயினும், அதனைத் தமக்கே உரிய பெயராகப் பெற்றவர், திருப்பெண்ணு கடத்தில் அவதரித்து மறைகளில் வல்லவராய், அருணந்தி சிவாசாரியர்பால் ஞானோபதேசம் பெற்றுச் சந்தானுசாரியருள் மூன்றுமவராய் விளங்கிய அவரேயாவர்.

சந்தானுசாரியருள் ஏனை மூவர்போல மறைஞானசம்பந்தர் சாத்திரம் ஒன்றும் செய்யவில்லை என்றாலும், சாத்திரங்கள் பல வற்றிற்கு வித்திட்டவர் இவரே எனலாம். இவரது பெருமை சொலற்கரியது.

'இவர் நடுநாட்டில் உள்ள திருப்பெண்ணுகடத் தலத்தில் அவதரித்தவர்' என்று சந்தானுசாரியர் புராணம் தெளிவாகக் கூறுகின்றது. சாம வேதிகள் குலத்தில் பராசர முனிவர் கோத் திரத்தில் அவதரித்தவர் என்பதையும், அருணந்தி சிவாசாரியார் பால் ஞானோபதேசம் பெற்றவர் என்பதையும், சிவப்பிரகாச நூலே குறிப்பிட்டுவிடுகின்றது. 'கடந்தைச் சம்பந்தர், மருதைச் சம்பந்தர்' என இருவகையாகவும் சொல்லப்படுவதில் கடந்தை (பெண்ணுகடம்) இவரது அவதாரத் தலமாதல் கூறப்பட்டமை யால், மருதை (மருதூர்) இவர் வாழ்ந்த இடம் என்பது விளங்கும்

அருணந்தி சிவாசாரியரது உபதேசத்தின் வழிச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடிச் சிவஞானம் கைவரப்பெற்று, உலகி யலைக் கடந்த நிலையில் இருந்த இவர் தில்லையில் எழுந்தருளி இருந்தபொழுதுதான் உமாபதி சிவாசாரியரை ஆட்கொண் டருளினர்.

தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவராய்க் கூத்தப்பெரு மானைத் தொட்டு வழிபடும் பேறுபெற்ற உமாபதி சிவாசாரியர் அவ்வாறு வழிபட்டுத் தமக்குரிய விருதுகளுடன் சிவிகையில் இல்லத்திற்குச் சென்றுகொண்டிருக்கையில் இவர் (மறைஞான சம்பந்தர்) கண்டு அவரது பரிபக்குவ நிலையை உணர்ந்து, "பட்ட கட்டையில் பகற்குருடு ஏகுதல் பாரீர்" என்று தம் மாணுக்கருக்குக் காட்டியருள, அச்சொல் செவியில் விழ்ந்த உடன் உமாபதி தேவர் அச்சமுற்று 'இவரே நம்மை ஆட் கொள்ள வந்த ஞானுசிரியர்' என உணர்ந்து சிவிகையினின்று இறங்கி அவர் அருகில் சென்று அடி பணிந்து, தமக்கு ஞானோபதேசம் செய்து ஆண்டருள வேண்டினர். 'பட்ட கட்டை' என்பது பல்லக்கையும், 'பகற் குருடு' என்பது பகலில்

தீவர்த்தியுடன் செல்வதையும் மேற்போக்கில் குறித்ததாயினும், பயனில்லாத உலகியலைக் கலைஞானமெல்லாம் நிரம்பப்பெற்றிருந்தும் விடாது பற்றியிருத்தலையே உண்மையில் குறித்தது. பக்குவ மிகுதியால் அதனை அறிந்துகொண்ட காரணத்தாலே உமாபதி தேவர் இவரது பெருமையை உணர்ந்து இவரையே ஞானசிரியராக அடைந்து உபதேசிக்க வேண்டினர். ஆயினும், ஆசாரியர் மாணவரது பக்குவ மிகுதியை முற்றுங்காண விரும்பி, ஒருநாட் காலையில் செங்குந்தர்வீதி வழியே சென்று, பாவிற்கு ஏற்றும் கஞ்சியை வார்க்கும்படி கேட்டு, அவர்கள் வார்த்தபொழுது அதனைக் கையில் ஏற்று, 'சிவப்பிரசாதம் சிவப்பிரசாதம்' எனப்பருக, ஆசிரியரது கைவழியே ஒழுகிய கஞ்சியை உமாபதிதேவர் தம் கையில் ஏற்று, 'குருப்பிரசாதம், குருப்பிரசாதம்' எனப் பருகினர். அவரது பக்குவ மிகுதியை உணர்ந்த ஞானசாரியர் பின்பு அவருக்கு ஞானத்தை உபதேசித்துத் தம் மாணவருள் முதல்வராகக் கொண்டருளினர். 'மேற்குறித்த செயல் அந்தணர் குலமாகிய தங்கள் சாதிக்குச் சிறிதும் ஒவ்வாது' என்று தில்லைவாழ் அந்தணர் உமாபதிதேவரைத் தம்மில் ஒருவராய்த் தம்முடன் வாழலாகாது என ஒதுக்கினர். அதனுல், உமாபதிதேவர் தில்லைக்கு வெளியில் உள்ள கொற்றவன்குடியில் இருந்துவருவாராயினர். எனினும், பலமுறை நடராசப்பெருமான் உமாபதி தேவரது பெருமையைப் பலவகையில் தில்லைவாழ் அந்தணருக்கு விளக்கியருளினன்.

சாதி, குலம் முதலியவை உலகியல் அளவில் வேண்டத்தக்க சில வரம்புகளேயன்றி, ஞானத்தில் அவ்வேறுபாடு இல்லை. உலகியலிலும் கல்வி, செல்வம், அதிகாரம் முதலிய சிறப்புக்களால் சாதி, குலம், வயது முதலிய வேறுபாடுகள் மறைந்தொழிதலைக் காண்கின்றேம். இனி அதிகாரங்கூட அன்பில் மறைந்து விடுகின்றது. கணவன் மனைவியரிடைக் 'கணவனே தலைவன்' என்பது அவர்களது காதல்வாழ்க்கையுள் மறைந்து விடுகின்றது. இவற்றையெல்லாம் நோக்கும்பொழுது அருள்வேட்கை அல்லது ஞானவேட்கை உண்டாகும்பொழுது சாதி, குல வேறுபாடுகள் எங்கே இருக்க முடியும்! இதைத்தான் நடராசப்பெருமான் தில்லைவாழ் அந்தணர்களுக்குப் பல வகையில் உணர்த்தியருளினன்.

'ஆசாரியரது பரிகல சேடம் ஞானத்தை நல்கும்' என்னும் கருத்தினுல் அதனை உண்பது ஞானவேட்கை உடைய மாணாக்கரிடத்து இயல்பாக நிகழ்வது. இஃது ஆசாரியரை உயிர்க்குயிரானவராகக் கருதும் பக்தி மிகுதியால் நிகழ்வது. கணவனது பரிகல சேடத்தை மனைவி அன்பு காரணமாக வேற்றுமை

கருதாது உண்பது உலகியலில் காணப்படுவது. அந்த நிலேயே, ஞானசாரியரை அடுத்த மாணவரிடமும் காணப் படுவது.

" நின் - பொன்னடித் துணை சேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மாந்திப் பவக்கட லுழக்கும்
வரனுடை ஞமலி யாகிநின்
அருளையும் மறவா தவதரிப் பதுவே - யான் வேண்டுவது "

என்று குமரகுருபர அடிகள் தம் ஞானசிரியர்பால் வேண்டினமை இங்கு நினைவுகூரத் தக்கது.

இத்தகைய அதிதீவிர பக்குவத்தால் ஞானம் எளிதில் சித்திக்கப்பெற்ற உமாபதி தேவர், பின்னர் எட்டுச் சாத்திரங் களை அருளிச்செய்தார். எனவே, அத்துணைச் சாத்திரங்களுக் கும் வித்திட்டவர் மறைஞானசம்பந்தரே என்பது தெளிவாகும்.

'திருஞானசம்பந்தர், மறைஞானசம்பந்தர்' என்னும் இரு ஞானசம்பந்தர்கட்குப் பின்னர்த் தருமையாதீனத்தை நிறுவிய ஆதி பரமாசாரியர் ஞானசம்பந்தராய் விளங்கினர். இவர் ஞான பீடம் நிறுவி வீற்றிருந்து பலருக்கு ஞானத்தை வழங்கியருளின மையால், 'குருஞானசம்பந்தர்' எனக் குறிக்கப்பெறுகின்றார்.

இத்தகைய நிலேயில் ஞானசம்பந்தத்துடன் நிலவுலகில் வாழ்ந்து பலர்க்கு ஞானத்தை வழங்கி இறைவனோடு இரண்டறக் கலந்த ஞானசாரியர்களது திருநாளைப் நாம் பெருநாளாகக் கொண்டு சிறப்புறக் கொண்டாடி, அவர்களை நினைத்தும், வாழ்த்தியும், வணங்கியும் நிற்பதே நாம் ஞானத்தைப்பெறுவ தற்கு வழியாகும்.

தருமையாதினம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், 'ஆசாரியப் பெருமக்களது திருநாட்கள் எங்கும் என்றும் யாவராலும் சிறப்புறக் கொண்டாடப்படல் வேண்டும்' என்னும் இயல்பான தங்கள் திருவுளத்திற்கேற்பப் பாலித்தருளிய அருளாணையின் வண்ணம் மறைஞானசம்பந்தரது திருநாள் இவ்வாதீனத்தில் சில தினங்கட்குமுன், சமயாசாரிய சந்தானசாரியர்களுக்கு அபிடேக ஆராதனை, சமயச் சொற்பொழிவு முதலியவற்றுடன் கொண்டா டப்பெற்றமை, சைவப் பேரன்பர்களது சமய ஒழுக்கத்திற்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்தது. அவ்வழியில் ஆசாரியப் பெரு மக்களது திருநாட் சிறப்புக்கள் ஆங்காங்கு நிகழப்பெறுமாயின், சைவ சமயம் தழைத்து இனிது ஓங்க ஏதுவாகும்; அத்தகைய நிலேக்குத் திருவருள் துணை புரிவதாக.

உ
குருபாதம்

13–8–1972 ஞாயிறன்று பெண்ணாகடம் முத்துக்குமரப்பூங்காவில்
நடைபெற்ற வரவேற்பு விழாவில்

**பெண்ணாகடம் வட்ட அன்பர்களிடையே**

தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

திருவாய்மலர்ந்தருளிய

# ஆசியுரை

**திருச்சிற்றம்பலம்**

பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற்கு இச்சையுண்டேல் இருங் கூற்றகல
மின்னாரும் மூவிலைச் சூலம் என்மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே!

**திருச்சிற்றம்பலம்**

பெண்ணாகடத்துப் பெருமக்களே ! தாய்மார்களே ! குழந்தைகளே ! மெய்யன்பர்களே !

'தில்லை மூவாயிரம், கடந்தை ஆறாயிரம்' என்ற வழக்காறு ஒன்று உண்டு. திருஞானசம்பந்தர் காலத்தே ஆறாயிரம் அந்தணர் குடும்பங்கள் இங்கே வாழ்ந்திருந்து மறை ஓதி வழிபட்ட செய்தி அவரது 'ஒடுங்கும் பிணிபிறவி' என்று தொடங்கும் பதிகத்துள் 'கெழுமனைகள் தோறும் மறையின் ஒலி தொடங்கும் கடந்தை' என வரும் தொடரால் உறுதிப்படுகின்றது. அந்தணர்கள் மறைஓதி வழிபட்ட தூங்கானை மாடத்தைத் தொழுதால் பிணி நீங்கும்; நிலையான வாழ்வு வரும்.

எது நிலையான வாழ்வு? தற்காலத்தே வீட்டையும், நிலத்தையும் பணத்தையும் பலர் நிலையானவைஎன எண்ணுகின்றனர். இவையெல்லாம் நிலையுடையன அல்ல. நிலையில்லாதனவற்றை நிலை என்று மயங்கும் நெஞ்சை அப்பர் பெருமான் அழைக்கிறார்; அழைத்து 'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா!' என்ற தாண்டகத்தால் எது நிலைபேறுடைய செல்வம் என அறிவிக்கிறார்.

உடம்பு நிலை என்று பலர் கருதுகிறார்கள்; உடம்பென்னும் மனையில் ஆவியார் இருக்கும் குடி எத்தனை ஆண்டு ஒப்பந்தம் என யாருக்குத் தெரியும்! சில நேரத்தில் இந்த வீட்டைக் காலி செய்யும்படி உயிர்க்கு முன்னறிவிப்பு தரப்படும். நோய்தான் அந்த முன்னறிவிப்பாகும். நோயின்றி உயிர்பிரியும்பேறு நமது கயிலைக் குருமணி போன்ற அருளாளர்களுக்கே சித்திக்கும்.

குடியிருக்கும் வீடும் நிலையல்ல - உயிர் குடியிருக்கும் உடம்பாகிய வீடும் நிலையல்ல; ஆனால், இவைஎல்லாம் தற்காலிகமான வீடுகளே நிலையான வீடு இறைவனது திருவடிப்பேறேயாகும். உயிர் விடுதலைபெற்று அமைதிபெறுகிற இடத்தை வீடு என்கிறோம். விடுதலைபெறுவது - வீடு. வீடு, பேறு, மோட்சம் என்பன ஒரே பொருளைக் குறிக்கும் தனித்தனிச் சொற்கள். விடுதலை பெறுவதை உயிர்கள் இயல்பாகவே விரும்புகின்றன. மாணவன் பள்ளியிலிருந்து விடுதலைபெற விரும்புகின்றான். அலுவலகத்திலிருந்து பணியாளர் விடுதலைபெற விரும்புகின்றனர். மக்கள் பிறர் ஆட்சியில் இருந்து விடுதலைபெற விரும்புகின்றனர். விடுதலை வேட்கை இயல்பு எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் பரவெளியில் உயிர் செல்வதே வீடு என்பது. அதுவே உண்மையான வீடு; அங்கே கிடைப்பதே உண்மை இன்பம். உலகின்பம் கருவிகளைக் கொண்டு அனுபவிப்பது; அங்கே கருவிகள் தேவையில்லை.

அவ்வீடுபேற்றிற்கு வழிகாட்டுகிறார் அப்பர்பெருமான்; அவ்வழியும் உழைப்பின் வழிப்பட்டது. எதனையும் உழைக்காமல் பெறமுடியாது - உழைக்காமல் உயரவும் முடியாது; என்ன செய்யவேண்டும்......?

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டு" ... என்று வழிகாட்டியருளுகிறார்.

தலையாரக் கும்பிடுதல் என்றால் தலை பூமியிலே படும்படி கும்பிட்டு வணங்கவேண்டும். தலையார என்பதில் ஆர்தல் - என்பது நிறைதல். தலையைப் பெற்றிருப்பதே வணங்குவதற்குத் தான் இதனைத் திருவள்ளுவர்

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்று அழகாக விளக்குவர். 'வணங்கத் தலைவைத்து' என்பர் மணிவாசகர். சேரமான்பெருமாளும் இதனைப் பேசுகிறார்.

வேறொரு இடத்தில் அப்பர்பெருமானும் 'தலையே நீ வணங்காய்' எனக் குறிப்பிடுகிறார்.

இறைவன் நம் வினைக்கீடாகப் பிறப்பைக் கொடுக்கிறார். நல்வினைக்கு நன்மையும், தீவினைக்குத் தீமையும் அனுபவித்தே ஆகவேண்டும். சில நல்லவர்கள் துன்பம் அனுபவிப்பது போலவும், சில தீயவர்கள் இன்பம் அனுபவிப்பது போலவும் வெளிப்படையாகத் தோன்றும். ஆழ்ந்து பார்த்தால் யாவும் வினைப்பயன் என்பது விளங்கும். திருவள்ளுவர் மிக அழகாக இந்த எண்ணத்தை விவரிக்கிறார்.

'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்'

என்கிறார். படும் என்பது 'தோன்றும்' என்றும், 'அழியும்' என்றும் பொருள்தரும். இங்கே ஆழமாக ஆராய்ந்தால்-சிந்தித்தால் இதன் அடிப்படை உன் கருத்தில்படும்; அதாவது தோன்றும் என்று விளக்குகிறார். இலக்கணக் கொத்து சுவாமிநாத தேசிகர் 'பலகால் பயிலவே பழகுக' என்பார். மாறுபட்ட உலகியலை ஆழச்சிந்தித்தால் காரணம் அறிவிற்குத் தானே புலப்படும் என்பதே கருத்தாகும்.

வினை உடனடியாகவும் பயன்தரும் - காலந்தாழ்த்தும் பயன் தரும். கீரை, வாழை, தென்னை, பனை இவை பயன்தரும் கால அளவை உற்றுநோக்கவேண்டும். கீரை ஒருமாதத்தில் பலன் தரும்; வாழை ஓராண்டில் பலன்தரும், தென்னை ஐந்து ஆண்டில் பலன்தரும்; பனை இருபது முப்பது ஆண்டு கழித்துப் பலன்தரும். அதுபோல வினையின் ஆற்றலுக்குத் தக அது பயன் விளைக்கும். சிறு குற்றங்களுக்கு உடன் தண்டனை தரப் படுவதும், பெருங் குற்றங்களுக்கு நெடுநாள் விசாரித்துத் தண்டனை தருவதும் உலகியலிலும்உண்டு. அதுபோலத் தீவினை மிக மிகத் தண்டனை மெதுவாக வரும். பல்வேறு பிறவிகட்குப் பின்பும் தண்டனையை இறைவன் தந்தே தீருவான். வலுவில்லாத நோயாளிக்கு வலிமை உண்டாக்கிப் பின் அறுவை சிகிச்சை செய்வது உலகியல். அதுபோலச் சில உயிர்களை வளர வைத்துத் தண்டனை தருகிறான் இறைவன்.

நல்வினையாயினும், தீவினையாயினும் அவளவன் அனுபவித்தே தீரவேண்டும். 'கொன்றால் பாவம் - தின்றால் தீரும்' என்பதொரு பழமொழி தமிழ்நாட்டில் வழங்கிவருகிறது. அது புலால் உண்பதுபற்றி எனப் பலர் நினைக்கிறார்கள். இது வினை பற்றிய பழமொழி. 'தின்றால்' என்பது இங்கே 'அனுபவித்தால்' என்ற பொருளில், 'பாவத்தை அனுபவித்தல்லது தீர்த்தல்'

இயலாது என அறிவுறுத்துகிறது தண்டனைகள் திருத்தத்திற்காகவே! 'நல்ல குருநாதன் நம்மை வருத்துவது - கொல்ல அல்ல பொல்லாக்குணம் போக்க' என்பது பழம்பாட்டு.

பெண்ணுகடத்திறைவனைத் திருஞானசம்பந்தரும், அப்பரும் பாடிப் பரவியுள்ளனர். மெய்கண்ட தேவரும், பெரியபுராண மெய்யடியாருள் ஒருவராகிய கலிக்கம்பரும் இங்கே அவதரித்தனர் என்றாலும், இப் பழம்பெருமையை மட்டும் பேசிப் பகட்டடிப்பதால் பயன் இல்லை.

இங்கே, இவ்வளவு பெரிய வரவேற்பில் கலந்துகொள்ள நாம் இசைந்ததற்குக் காரணமே, பெருங் கூட்டத்தில் சில கருத்துக்களை வெளியிடுவதற்கே ஆகும். நாம் அடக்கமாக இங்கே வந்து இறைவனைத் தரிசித்துச் சென்றிருக்கலாம். என்றாலும், உனக்காக இல்லாவிட்டாலும், மற்றவர்களை ஈர்க்கவாவது இவை எல்லாம் இருக்கட்டும் என மெய்கண்டார் உணர்த்தினர்.

"உலகவாழ்வே நாம் அறியாமையில் இருந்து நீங்குதற்கு" என்பர் மெய்கண்டார். மெய்கண்டாரின் தத்துவத்தை நாமெல்லாம் புரியாதது என்று ஒதுக்குவது அறியாமை ஆகும். திருவள்ளுவரினும் சுருக்கமாக 12 நூற்பாவில் 40 வரியில் நூல்செய்தார். செய்து விளக்கத்திற்காகச் சில வெண்பாக்களும் அருளினர். அவரது மாணுக்கர் அருணந்தி சிவாசாரியார் சிவஞான போதத்தை விளக்குவதற்காகச் சிவஞானசித்தியார் என்ற அருள் நூலைச்செய்தார். மேலும் விளங்கச் சிவஞான முனிவரால் பேருரை காணப்பட்டது. அதையும் எளிமையாக்கிப் பேராசிரியர்கள் பலர் விளக்குகிருர்கள். அப்படியும் புரியவில்லைஎன்றல் நீ படிக்கவில்லை - அல்லது அறிந்துகொள்ளும் விருப்பம் இல்லை என்பதே கருத்தாகும்.

பேராசிரியர் திறமுடையவராயிருந்தாலும் மாணவனுக்கு ஓரளவு அறிவும் ஆற்றலும் இருக்கவேண்டும். ஆர்வமும், அக்கறையும் இல்லாதவர்களைச் சொல்லித் திருத்தவேமுடியாது. எதற்காக, ஏன் படிக்கிறேம் என்பதை நூற்றுக்குநூறு தெரியாமலேயே மனிதன் இன்று படிக்கிருன். நம்மில் பலருக்கு நாம் ஏன் கல்வி கற்றிருக்கிறேம் எனத் தெரியாது. கல்வி - வேலைக்காகவோ, ஊதியம்பெறவோ படிக்கப்பெறவில்லை. அதன் நோக்கம் வேறு. இதனை,

"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே"

என விளக்குவர் பவணந்திமுனிவர். அறத்தை அறியவும், பொருள் ஈட்டும் நெறிகளைத் தெரிந்து கொள்ளவும், இல்லற

இன்பத்தைநேர்மையாக நுகரவும் செய்து, வீடுபேற்றை விளக்கு வதே கல்வியின் குறிக்கோளாகும். கண்ணால்காண்பது, காதால் கேட்பது, மூக்கால் முகர்வது. நாவால் சுவைப்பது. உடலால் உணர்வது போன்ற பொறிவழி இன்பமெல்லாம் சிற்றின்பம். உயிர்கள் அறத்தைத் தாமே விரும்பிச் செய்யா. திருமணம் ஆண்டவன் மக்களை அறவழியில் செலுத்த வைத்த ஜாலவித்தை! அறத்தைக் கூட்டி இயற்ற இறைவன் திருமணவாழ்வைக் கூட்டு கிறான். உடற் பலம்பெற உண்ணவேண்டும். அதிலும் சுவை வைக் கிறான் இறைவன். அதுபோலவே சுவைகாட்டி, அறம் இயற்றத் தூண்டவே திருமணத்தைக் கூட்டுகிறான். இவற்றையெல்லாம் உணர்த்தும் கடமையும், பொறுப்பும், எங்களைப் போன்ற அறத் துறையினர்க்கு உண்டு.

'முதலும் இல்லாமல், கடையும் இல்லாமல், பொருளும், இன்ப மும்பெற விரும்புகிறார்கள் மக்கள்' என திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் குறிப்பிடுவது வழக்கம். இதன் உட்பொருள் முதல் என்பது அறம், கடை என்பது வீடுபேறு. அஃதாவது அறவுணர்வின்றியும், வீடுபேற்றில் விரைவின்றியும் செய்யப்படும் முயற்சிகள் பயன்படா என்பதே இதன் கருத்தாகும். உலகிய லிலும் பொருள் ஈட்டி இன்பம் அனுபவிக்க முதலும், ஒரு கடை யும் வேண்டுமென்பது புலனாகிறது.

உலகம் வியக்கும் தத்துவம் தந்த பேராசிரியர் இந்த ஊரில் அவதரித்தார் என்ற பெருமையோடு, நமக்கிருக்கும் கடமை யுணர்ச்சியையும் மறவாது இருத்தல் வேண்டும்

பெண்ணாகடம் என்ற பெயர், விண்ணிலிருந்து இந்திர னுக்கு மலர் கொய்ய இந்நகர்க்கு வந்த பெண் (தேவ மகளிர்) ஆ. (காமதேனு) கடம் (மதம் பொருந்திய வெள்ளானை) என்பன மீண்டும் திரும்பாமல் இந் நகரிலேயே தங்கிவிட்டதால் வந்த தென்பர். அருணந்திசிவம் தம் சிஷ்ய பரம்பரையினரான மெய் கண்டாரைக் காணத் திருத்துறையூரிலிருந்து திருவெண்ணெய் நல்லூர்க்கு வருகிறார். வந்தவர் ஆணவ முனைப்பால் தான் சென்று காணாது தம் மாணாக்கரை அனுப்புகிறார். ஒருவர்பின் ஒருவராகச் சென்ற மாணாக்கர்கள் மெய்கண்டாரின் சிவஞானோப தேசத்தில் ஈடுபட்டு அங்கே தங்கி விடுகிறார்கள். பின்னர் அருணந்திசிவமே நேரிற்சென்று ஆணவம் நீங்கி அடியவ ரானார் என்ற வரலாறு இப்பெண்ணாகட வரலாற்றோடு ஒத்த தன்மையுடையதாக அமைகிறது.

அருணந்திசிவம் தம் ஞானாசாரிராகிய மெய்கண்டாரைச் சிவமாகவே கருதி, கண்ணுதலும், கண்டக்கறையும் கரந்தருளி

வந்ததாகப் போற்றுகிருர். கடல்நீர் போன்ற ஆணவத்தால் பாழ்பட்டுக் கிடந்த அருணந்தி சிவத்தின் அறிவு மெய்கண்டாரைக் கண்டவுடன் - அவர் பார்வை பதிந்தவுடன் குடிநீர் போலத் தூய்மைபெற்றது. மாணவனுக்கும் உரிய பக்குவநிலை வந்தால்தான் ஞானசிரியன் பார்வை பலன்தரும். அத்வைத நெறியில் இராமகிருஷ்ணரிடம் விவேகானந்தர் அறிவுபெற்றிருக்கிருர். நமதாதீனத்தினும் பெரும் புலவராகவரும் குமரகுருபரர் மாசிலாமணி தேசிகரின் சொல்லில் அடங்குகிருர். அடங்கிக் காசி மடங்கண்டு, தருமையாதீன சீடர் மரபை உருவாக்குகிருர்.

இந்த ஊருக்கு நாம் புதியமல்லம் ஞானபீடத்திற்கு வந்த பிறகு இங்கே வருவது இதுதான் முதன்முறை நமது குருவான மெய்கண்டார் மீது கொண்ட - அவர்பிறந்த மண்மீதுகொண்ட அன்பால், அம்மண்ணில் வாழும் உங்களிடமும் பற்றுக்கொண்டோம்; மனைவிமூலம் அவள் உறவினர்களைத் தமதாக்கிக் கொள்வதுபோல. இப்பற்றெல்லாம் உங்கள் பற்றையும் நம் பற்றையும் நீக்கிக்கொள்ளவே.

"பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்ற குறளில் இக்கருத்தை அழகுற விளக்குவர் வள்ளுவர் பற்றுதலும் விடுதற்கே என்பார் பற்றுவிடற்கு அப்பற்றைப் பற்றுக என்ருர்.

மெய்கண்டார் பெருமைக்கு உலகையே காணிக்கையாகக் கொடுத்தாலும் ஈடாகாது. பள்ளிகள் ஆசிரியர் வாழ்வுக்கு அமைக்கப்படவில்லை. மாணவர் உய்விற்கே! இங்கே மெய்கண்டாரின் பள்ளியுண்டு. அங்கே முறையாகப் பயின்ருல் உய்யலாம். கடமையைக் காலத்தில் செய்துவருவோமேயானுல், பெருமை தானகவே வரும். பொருள் என்பது காசுகள் அல்ல; உண்மையான அறிவேயாகும்.

இறைவனுடைய திருவருள் விலாசத்தைப் புரிந்துகொள்ளும் அறிவே பெருஞ்செல்வம். 'அடியார்க்கென்றும் வாராதசெல்வம் வருவிப்பான்' என்பது வேளூர்த் தேவாரம். இங்கும் பலரும் நாம் அப்பர் கோயிலைக் கட்டியதாகக் கூறிஞர்கள். அப்பணி முன்னரே தொடங்கியிருந்தது. நாம் இடையில் சென்று கலந்துகொண்டோம். அதனைக் கட்டி முடித்தோம் என்பதைவிட, அதனுல் பெற்றிருக்கும் அறிவும் வளர்ச்சியுமே மிகப்பெரியது என உணர்கிறேம். முற்பிறப்பில் செய்த தவப்பயன் அப்பர் பணியில் ஈடுபடுத்தியது. இதில் நம் பங்கெல்லாம் அணில் இராமர் அணைக்கு உதவியதுபோலத்தான். பெண்ணுகடத்தில்

மெய்கண்டார்க்கு இயற்றிய பணியே இங்கே இவ்வளவு உயர்ந்த வரவேற்பைத் தந்திருக்கிறது என உணர்கிறோம்.

இராமகிருஷ்ணர் ஒரு உருவகக்கதை சொல்கிறார். ஒரு மன்னன் தம் மகளை ஒரு சிவனடியார்க்கே மணமுடிக்கவிருப்பதாகக் கூறியதைக்கேட்ட திருடன் ஒருவன், ஒருநாள் சிவனடியார் போல் வேடமிடுகிறான். மன்னனும் வேடமிட்ட திருடனுக்கே மகளை மணமுடிக்கிறான். திருடன் சிந்திக்கிறான். ஒருநாள் பொய்யாகச் சிவனடியார் வேடமிட்டதற்கே மன்னன் மகளை மணக்கும் பேறு கிடைக்கிறதே, உண்மை அடியாரானால் எத்தகு பெரும்பேறு வாய்க்கும் எனக்கருதி உண்மை அடியானானான். இது ஓர் உருவகக் கதை. இதனை எமக்காகக் கூறவில்லை. உங்களுக்காகவே கூறுகிறோம்.

இந்நாட்டை நன்னெறியில் வளர்க்கும் பிள்ளைகளாக உங்கள் பிள்ளைகளை வளர்க்கவேண்டும். தேசப்பற்றும், தெய்வப்பற்றும் பிள்ளைகளிடையே வளரவேண்டும். அக்காலை மண்ணுலகே - பொன்னுலகாக மாறும். நாமெல்லாம் இறைவனை வழிபடுகிறோம். ஆனால், இறைநெறியைப் பின்பற்றவில்லை வேலைக்குத் தகக் கூலிதரும் முதலாளிபோல, உழைப்பிற்குத் தக்க ஊதியத்தையே இறைவன் தருவான். நமது வழிபாட்டு முறைகளை எல்லாம் நம் முன்னோர்கள் விஞ்ஞான ரீதியில்தான் அமைத்துள்ளார்கள்.

இங்கே ஒரு குருகுலம் அமைப்பதெனவும், அதனையே தத்துவஞான கலைக்கல்லூரியாக விரிக்கலாம் எனவும் நான் கைந்து ஆண்டுகளுக்கு முன் நினைத்தோம். குருகுலம் அமைவது அவசியம். அதனை நடத்துவதற்கு நல்ல தகுதவாய்ந்தவர்களை இறைவன் தந்து அருள்பாலிக்க வேண்டும் நீங்கள் முழு ஒத்துழைப்பும் தருவதாக இருந்தால் மெய்கண்டார் அருளால் இதில் முயலலாம்.

இத்தகு பெருவிழா எடுப்பதுமட்டும் போதுமானதல்ல. மெய்கண்டாருக்கு நிரந்தர நிதிஒன்று அமைக்கவேண்டும். நித்திய பூஜைக்காக ரூபாய் 25,000 மூலதனமாக வைக்க எண்ணியுள்ளோம். நம்மால் இயன்றவரை நல்லறப் பணிகளுக்கு உதவுவோம்.

இங்கே குழுமியுள்ள எல்லார்க்கும் எல்லா நலன்களும் பெருகச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளையும், மெய்கண்டார் திருவருளையும் நினைந்து வாழ்த்தி, நாடுசெழிக்க, ஊர்செழிக்க, மக்கள் உள்ளங்கள் செழிக்க இறையருளைப் பிரார்த்திக்கிறோம்.

# திருவருட்பயன் விளக்க உரை

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,

**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்.**

( மலர் 31. இதழ் 9. பக்கம் 525 - இன் தொடர்ச்சி )

## 7- ஆம் அதி : உயிர் விளக்கம்

அஃதாவது அக இருளாகிய மாசினால் மூடப்பட்டுள்ள உயிர் அம் மாசின் நீங்கி விளக்கம் பெறும் முறைமை. இதனை ' ஆன்ம சுத்தி ' என்பர்.

முதற் குறள்,

" தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோல்
தானதுவாய் நிற்குந் தரம் "

எனவரும்.

இதன் பொருள் :- தான் (தூய) அதுவாய் நிற்கும் தரம் - அறியும் நெறியால், மெய்ப்பொருளை உணர்ந்த உயிர், பின் தான் என வேறு நில்லாது அத் தூய மெய்ப்பொருளேயாய் நிற்கும். தூ நிழல் ஆர்தற்கு ஆரும் சொல்லார் தொகும் இதுபோல் - நிழலை உடைய தூய இடத்தைக் கண்டவன் அவ்விடத்தை அடைதற்கு அவனைப் பிறர் வற்புறுத்தாதிருப்பவும், தான் அகன்று நில்லாது இயல்பிலே சென்று அதனை அடைதல் போல்வதாம்.

விளக்க உரை :- நிழலை உடைய இடம் தண்ணிதாதல் கூற வேண்டாமையின் அதனை விடுத்தும், தண்ணிதாயினும் அடைதற்கேற்ற தூய்மை யுடைத்தாதல் வேண்டும் என்பது கூற வேண்டுதலின் அதனை எடுத்தும், " தூ நிழல் " எனக் கூறினர். உவமை அடை (தூய்மை) பொருளினும் சென்று இயைந்தது. இடத்திற்குத் தூய்மை புதர் முதலாயின இன்மையும், மெய்ப் பொருட்குத் தூய்மை பாசத்திற் படாமையுமாம். இவற்றால் அவை துன்பம் இலதாதல் குறிக்கப்பட்டது.

நிழல், விடாத ஆகுபெயர்; என்னை ? அடையப்படுவது நிழலை உடைய இடமேயாகலின். ' தூண், நிழல் ' எனப் பாடம் ஓதி, ' நிழல், ஒளி ' எனக் கொண்டு ' தனக்கு நிழல் ' என இனி வரும் குறளின் பொருளே இதற்கும் பொருளாக உரைப்பாரும்

உளர்; அவ்வா றுரைப்பின் ' கூறியது கூறல் ' என்றும் குற்றம் வருதல் அறிக.

" சொல்லார் " என்பது, 'சொல்லாராக' எனச் செய வெனச்சமாய் நின்ற முற்றெச்சம். அதனால் அவ்விடத்துச் சிறப்பும்மை தொகுத்தலாயிற்று. " தொகும் " என்பது எச்சம். தொகுதல் - சேர்தல். " போல் " என்னும் முதநிலை, ' போலும் ' என முற்றுப் பொருள் தந்தது, " பெறுவது - கொள்வாரும் கள்வரும் நேர் " 1 * என்பதில் " நேர் " என்பது போல.

" தான் " என்பது மேலே அதிகார இயைபினால் அறியும் நெறியைப் பெற்ற உயிரையும், ' அது ' என்பது அதனால் அறியப் பட்ட மெய்ப்பொருளையும் குறித்தன. அதனானே உயிர் பாசப் பற்றினது துன்ப நிலையையும், மெய்ப்பொருளினது இன்ப நிலையையும் உணர்ந்தமை பெறப்பட்டது. படவே, உவமைக் கண்ணும், தொகுவோர், வெயிலது வெப்பத்தையும், நிழலது தட்பத்தையும் உணர்ந்தவராதல் பெறப்படும், என்னை ?

" சுட்டிக் கூறு வுவம மாயின்,
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே " 2 *

என்பது இலக்கண மாகலின். உவமை, தான் அதுவாய் நிற்றல் இயல்பாதலை உணர்த்திற்று. இஃது இயல்பாயினும், அநாதிக் குற்றமாகிய பாசத்தால் செயற்கைபோலத் தோன்றும் என்க.

இதனால், ' உயிர் சிவத்தை அடைதல் இயற்கை ' என்பது கூறப்பட்டது. இதனானே, உயிர் பாசத்தோடு கூடிநிற்றல் செயற்கை என்பதும் அறிந்துகொள்ளப்படும்.

வழிப்போக்கன் நிழலைவிட்டு நீங்கியவழி வெயிலே அவனுக்கு உளதாதல்போல, உயிர் சிவத்தைவிட்டு நீங்கியவழி அதற்கு உளதாவது பாசமே என்பதும் இதனால் உணர்ந்து கொள்க.

இரண்டாவது குறள்,

" தித்திக்கும் பாருனுங் கைக்குந் திருந்திடுநாப்
பித்தத்திற் றுன்றவிர்ந்த பின் "

எனவரும்.

---

* 1 குறள் 813. 2 தொல் - பொருள். உவம வியல்.

இதன் பொருள் :- நா பித்தத்தின், தித்திக்கும் பால்தானும் கைக்கும் - நாக்குப் பித்தத்தில் மூழ்கியுள்ளபொழுது, தித்திப்ப தாகிய பாலும் அதற்குக் கசப்பதாகவே தோன்றும்; (ஆயினும்) தான் தவிர்ந்தபின் திருந்திடும் - அந்நாக்குத்தானே பித்தத் தினின்றும் நீங்கிய பின்னர் அப் பால் அதற்கு முன்புபோலத் திரிவுபட்டுத் தோன்றாமல், உள்ளவாறே தோன்றும்; அஃதாவது தித்திப்பதாகவே தோன்றும் என்றபடி.

விளக்க உரை :- 'உயிர் பாசத்தில் மூழ்கியுள்ளபொழுது இன்பத்தைத் தருவதாகிய மெய்ப்பொருள் அதற்குத் துன்பத்தைத் தருவதாகவே தோன்றும்; ஆயினும் அவ்வுயிர் பாசத்தினின்றும் நீங்கிய பின்னர் அதற்கு அம்மெய்ப்பொருள் முன்புபோலத் திரிவுபட்டுத் தோன்றாமல் உள்ளவாறே (இன்பந் தருவதாகவே) தோன்றும்' என்னும் பொருளைத் தோற்றுவித்து நிற்றலால், இக்குறள் ஒட்டணி.

"பால்தானும்" என்பதில் தான், அசைநிலை. உம்மை தித்திப்பை இயல்பாகவே உடைமையைக் குறித்து நிற்றலின், உயர்வு சிறப்பு. "பித்தத்தின்" என்புழி, 'உள்ளபொழுது' என்பது சொல்லெச்சம். கைத்தல் செயற்கையும், தித்தித்தல் இயற்கையுமாயினும், பித்தமாகிய குற்றமும், அதன் நீக்கமும் காரணமாக அவை முறையே இயற்கையும், செயற்கையும் போலத் தோன்றும் என்பது அறிவித்தற்கு, அறிவதன் தன்மையை அறியப்படும் பொருள்மேல் ஏற்றி, 'கைக்கும் திருந் திடும்' என ஓதினர். இதனானே பொருளினும் அவ்வாறுதல் கொள்க. இதனால் மேல், 'பெத்தமும் முத்தியும், செயற்கையும் இயற்கையும் ஆம்' எனக் குறிப்பினாலும், கூற்றினாலும் உணர்த்திய பொருள்கள், அவற்றை அங்ஙனம் தெளியமாட்டாது மயங்கு வார்க்கு உவமையில் வைத்துத் தெளிவிக்கப்பட்டன. படவே, பாசத்தைச் சார்ந்து பாசமாய் நிற்கின்ற உயிர் அதனின் நீங்கிப் பதியைச்சார்ந்து அதுவாய் நிற்றலே அதற்குத் தூய்மையாவது என்பது இனிது விளங்கிற்று.

"பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி"*

என்றது காண்க.


"ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ் சாருநாள் எந்நாளோ"†

---

* சிவஞானசித்தி, பரபக்கம் - பாஞ்சராத்திர மறுதலை. 23.
† தாயுமானவர்: எந்நாட்கண்ணி, நிற்குநிலை - 28.

[ தொடர்ச்சி 582ஆம் பக்கம் பார்க்க ]

பெண்ணாகடம் வட்ட அன்பர்கள் நிகழ்த்திய குருவழிபாட்டில்




ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கொலுக்காட்சி வழங்கியருளுதல்
(13—8—1972.)

13—8—72 இல் பெண்ணுகடத்தில்
திருப்பெண்ணுகடம் வட்ட அன்பர்கள் அளித்த வரவேற்பில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
அன்பர்கட்கு அருளாசி வழங்கும் காட்சி.





திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான


[மேல்] திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீசுவரர் திருக்கோவில்

மகாகும்பாபிஷேகக் காட்சி

கீழ்] திருவாவடுதுறை கும்பாபிஷேக விழாவில், குன்றக்குடி, திருவாவடுதுறை

குருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும், திருப்பனந்தாள்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை



உயர்நீதிமன்ற நடுவர் கனம் திரு. B. S. சோமசுந்தரம் அவர்கள் குடும்பத்துடன் தரிசித்தல்.

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

( மலர் 31. இதழ் 9. பக்கம் 522 இன் தொடர்ச்சி )

அடைந்த பல்வகைப் பிறப்பினுள் இப்பிறப்
பரியதே யாமன்றோ !
கடைந்த போதினில் அலைப்புணும் தயிரெனக்
கவலையுற்றாய் நெஞ்சே
மிடைந்த தேகமும் மிகுதெருட்சியுமுள
வேலையே மலர்மொக்குள்
உடைந்து தேனிழி மாலையை யாற்றரன்
உபயதாள் அணிவாயே 46

( இ - ள் ) நெஞ்சு ஏ - ஏ மனமே. (நாம்) அடைந்த பல வகைப் பிறப்பினுள் - (வினைப்பயன் காரணமாக) எடுத்துக் கொண்ட (எழுவகையான) பலவகைப் பிறவிகளுள்ளும், இப் பிறப்பு அரியது ஏ ஆம் அன்று ஓ - இப்போது அடைந்துள்ள இந்த மானிடப் பிறவியானது அரியதினும் அரியதாம் ஆகும் அல்லவா ? கடைந்தபோதினில் அலைப்பு உணும் தயிர் என - கடைகின்ற போழ்தினில் அலைக்கப்பட்ட தயிரைப்போல, கவலை உற்றாய் - சுழற்சியுற்றுக் கவலையெய்தினாய், (ஆகையினால்) மிடைந்த - (இப்போது திருவருளானே) கிட்டிய, தேகமும் - உடலமும், மிகுதெருட்சியும் - மிக்க தெளிவும், உளவேலை ஏ - உள்ள சமயத்திலேயே, மலர்மொக்குள் உடைந்து தேன் இழி மாலை - மலர்தற் பொருட்டாய (பருவமுற்ற) அரும்புகள் நெகிழ்ந்து விரிந்து தேன் சொரியப்பெற்ற மாலைகளையணிந்த, ஐயாற்று அரன் உபயதாள் பணிவாய் ஏ - திருவையாற்றுப் பெரும் பதியின்கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய இரு திருவடிகளையும் வணங்குதலைச் செய்து பேறு பெறுவாய் (எ - று).

பல்வகைப் பிறவிகளாவன :

(கு-ரை) "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் - எம்பெருமான்"

என்பது திருவாசகம்.

அலைப்புறல் - ஒருபாற்றங்காது உழலல். மிடைதல் - கிடைத்தல். நெருங்கல், உண்டாதல். தெருட்சி - தெளிவு. (உள்ளதை உள்ளவாறறிந்துறல்) வேலை-போழ்து (காலம்). மலர்மொக்குள்-வினைத்தொகை. உடைதல் - விரிதல். உபயதாள் - இரு திருவடிகள். மாலை - அலங்கல். மலர்களால் தொடுக்கப்பெற்றது. அரன் ஹர: என்பது அரனெனவாயிற்று; தற்பவம் - அழிப்பவன். நலன் அருள்பவன், என்பது பொருளாகும்.

வாய்ந்த விவ்வுடற் புனலிடைக் குமிழியாம்
மற்றதில் உறுமின்பம்
தோய்ந்த கானல்நீ ராகுமற் றிதற்குறு
துயரள விலதாநீ
ஆய்ந்தி லாமையில் உழன்றனை நெஞ்சமே
அல்லநீர்ந் தையாற்றுள்
ஏய்ந்த நாதன்றாட் கன்பொடும் இடைவிடா
தேத்தின்வீ டெளிதாமே. 47

(இ-ள்) நெஞ்சம் ஏ - மனமே, வாய்ந்த இவ் உடல் புனல் இடை குமிழிஆம் - (நல்வினை தீவினை எனும் இருவினைகட்கு ஈடாக) வாய்க்கப்பெற்ற இம் மானிட உடலானது நீரின்கண் தோன்றும் குமிழி (மொக்குள்) போல நிலையிலது ஆம். மற்று - அதுவேயுமன்றி, அதில்உறும் இன்பம் தோய்ந்த கானல் நீர் ஆகும் - அவ்விடம் வாய்ந்த உடலிடத்துத் தோன்றப்பெறும் நலமானது வேனிற்காலத்தில் வெயிலிடைத் தோன்றப்பெற்ற பேய்த் தேர் நீர்போன்று நிலையிலதாகும். மற்று இதற்கு உறு துயர் அளவு இலது ஆம் - அஃதல்லாமல் இவ்வுடற்குறு துன்பமோ அளவிலது ஆகும், நீ - ஆய்ந்து இலாமையில் (உழன்றனை) - உடற்குறு இன்ப துன்பங்களை நன்கு ஆராயப் பெருமையில், அல்லல் உழன்றனை - துன்பங்களையே நுகர்

கின்றனே. அல்லல்தீர்ந்து - அத்துயர் நீங்கப்பெற்று. ஐயாற்றுள் ஏய்ந்த நாதன் தாட்கு அன்புஒடு இடைவிடாது ஏத்தின் - திருஐயாற்றின்கண் இயைந்திருக்கின்ற இறைவன் திருவடிகட்கு அன்புபூண்டொழுகி இடைவிடாமல் துதிப்பாயேல், வீடு எளிது ஆம் - முத்திப்பேறு எளிமையாகச் சித்திக்கப்பெறும் என்பதாம்.

(கு - ரை) 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' என்னுந் திருவிருத்தக் கருத்தே கொண்டு வாய்ந்த இவ்வுடல் என்றார். புனல் இடைக்குமிழி, நீரிற் குமிழியெனு நீதிநெறிவிளக்கவடியினை யொற்றியது. கானல் - பேய்த்தேர். சிற்றின்பத்தால் வருங்கேடு பெரிது என்பார் இதற்குறு துயர் அளவிலதாம் எனப்பட்டது. ஆய்தல் - நிலை நிலையாமையினை யுள்ளவாறுணர்தல். உழலல் - துன்பத்திடைப்பட்டுக் கவலுறுதல்; அல்லல் - பிறப்பு இறப்புக்களால் வரும் தொல்லை. ஏய்ந்த - பொருந்தித் திருக்கோயில் கொண்டருளிய. நாதன் - ஓசை ஒளியெலாமாகியுள்ளவன். இடைவிடாது - விட்டுவிட்டுக் கூறுது ஒருபடித்தாய் நினைப்பது. வீடு - முத்திப்பேறு. எளிது - மிகவும் எளிமையுடையது. ஆகும் என்பது ஆம் எனவாயது. ஏ, தேற்றம்.

ஆம வன்றனித் திருவரு ளன்றியோர்
அணுவுமே யசையாதால்
நீம யக்கமுற் றேபல விதங்களை
நினைவதென் மாவில்வத்
தாம வேணியை யாறனம் வினைவழித்
தருகுவன் பேரின்பே
வாம நெஞ்சமே நீநிரா சையையுறு
வாய்சுக முறுமாறே. 48

(இ - ள்) வாம(ம்) நெஞ்சமே - அழகிய மனமே! நீ - கவலற்க. அவன் தனித் திருஅருள் அன்றி ஓர் அணுவும் ஏ அசையாது (ஆல்) - அப்பெருமானுடைய ஒப்பற்ற திருவருள் ஆணையில்லாமல் ஒரு சிறு அணுவும் கூட அங்கும் இங்கும் எங்கும் அசையப் பெருது. ஆம் - திருவருள் ஆகும்போது ஆகும். மயக்கம் உற்று ஏ பலவிதங்களை நினைவது என் (எவன்)- ஆசையினுல் நீ, மயக்கத்தன்மையெய்திப் பலவிதமான எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டு எண்ணுவது யாது கருதியோ (பயனுருது) கூறுவாய். மா, வில்வத்தாமம் வேணி ஐயாறன் - பெருமைபொருந்திய கூவிளம் எனப்பெறும் வில்வ மாலையினை

யணிந்த சடாமகுடத்தினையுடைய திருவையாற்றுப் பரமன். நம்வினை வழி பேர் இன்பு ஏ தருகுவன் - நம்முடைய நல்வினையின்படியே பேரின்பவீடாகிய முத்தி நலத்தினைக் கொடுத்தருளுவன். நீ, சுகம் உறும் ஆறு நிராசையை உறுவாய் - நீ நலமுறும் தன்மையாகிய பிறவியறுத்தற்குக் காரணமாகிய ஆசையினை யறவே நீங்கப்பெறுவாய். (எ-று)

(கு - ரை) அருணைக்கலம்பகம், " அவனன்றி யோரணுவும் அசையாதென்பது அறிந்தனமே" என்பதாம். ஆயவன் - பொதுவுஞ் சிறப்புமாகிய வேதாகமங்களினுல் பெரிதும் ஆராயப் படுகின்ற பேரின்பப் பொருளாயவன். தனித்திருவருள் - ஒப்பற்ற கருணை 'அன்றி ஓர் அணுவும் அசையாது, அ. க. ஒற்றியது. மா வில்வம் - பல நலங்களைத் தரும் வில்வம் என்பார் மா வில்வம் என்ருர். என் - யாது என்பதன் பொருளது; ஒன்றுந் தராது என்பதாம். தாமம் - நீண்டமாலை. வேணி - சடை. 'பரப்பு நீர்க்கங்கையாளைப் படர்சடைப்பாய வைத்தார்" என்பது அப்பர் அருள்மொழி. சடாமகுடம் ஐயாறப்பருக்கியல்பாக அமைந்துளது என்பது ஐயாற்றுத் திருமுறைப் பாசுரங்களால் நன்கறியக் கிடக்கும். வாமம் - வனப்பு. நிராசை- ஆசையின்மை. "ஆசையருய்ப் பாசம் விடாய் ஆனசிவ பூசை பண்ணுய்" என்னும் சிவபோகசார வாக்கியமும், "ஆசையறுமின்கள், ஆசையறுமின்கள்" என்னும் திருமந்திரங்கொண்டும், நிராசையுறுவாய் என்றனர்.

( தொடரும் )

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswamy Devasthanam, Sirkali.

"Much indebted to Lord Sattanatha and the temple authorities for having this unique opportunity of visiting this famous temple. The temple was maintained clean throughout. Naturally the body and mind also become clean."

(Sd.) H. Venkateswaran,
Asst. Director of Animal Husbandry
Akkur.

18—5—72.

# திருமந்திரம்-மூலமும் உரையும்

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

(மலர் 31. இதழ் 9. பக்கம் 517 இன் தொடர்ச்சி)

## 17. அறஞ்செயான் திறம்

260 எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன்அறி யாரே.

ஒட்டிய நல்லறம் செய்யாதவர் செல்வம் - பொருந்திய நல்ல அறங்களைச் செய்யாதவரது செல்வம். எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன - எட்டி மரத்தினது பெரிய பழம் பழுத்து வீழ்ந்து பயன்படாது கிடந்ததுபோலாம். வட்டி கொண்டு ஈட்டியே மண்ணின் முகந்திடும் - வட்டி வாங்கி ஈட்டி உலகில் பிறர் பொருளைக் கவர்ந்திடும். பட்டிப்பதகர் பயன் அறியாரே - வஞ்சனையுடைய பாதகர்கள் செல்வத்தின் பயனை அறியாதவராவர்.

எட்டிப்பழம் சுவையின்மையின் பயன்படாது; அதுபோல அறஞ்செய்யான் செல்வமும் பயன்படாது. வீழ்ந்தன - வீழ்ந்தன்ன. தொகுத்தல் விகாரம். பயன் அறியாமையாவது, செல்வத்தின் பயன் ஈதல் என்று அறியாமை. "ஈதல் அறம்" என்ற ஔவையார் வாக்கை நோக்குக.

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்திழக்கும் வன்கண வர்"

என்று நாயனாரும் பயன் அறியாரை வன்கண்ணவர் என்று இழித்துக் கூறினர்.

வட்டி வாங்கிப் பிழைக்கும் பாதகர், செல்வத்தின் பயனாகிய அறத்தை அறியார்.

261 ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம்அறி யாரே.

ஒழிந்தன காலங்கள் - பல ஆண்டுகள் கழிந்தன. ஊழியும் போயின - பலப்பல ஊழியும் சென்றன. கழிந்தன கற்பனை - எத்தனையோ மனக்கோட்டைகள் தகர்ந்தன. நாளும் குறுகி - வாழ்நாளும் குறைந்து. பிழிந்தனபோலத் தம் பேர் இடர் ஆக்கை - சத்து நீங்கின சக்கைபோலவுள்ள துன்பத்தைத் தருகின்ற தம் உடம்பு. அழிந்தன கண்டும் அறம்அறியாரே - பயனற்று அழிவதைப் பார்த்தும் உலகத்தினர் அறத்தின் மேன்மையினை அறியாது உள்ளனரே!

ஊழி - உலகமுடிவு. கற்பனை - வீண் எண்ணங்கள்.

"உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன"

என்ற ஔவையார் வாக்கும்,

"ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல"

என்ற நாயனார் வாக்கும் ஒப்பிட்டுக் கொள்க. பேரிடர் ஆக்கை - துன்பந்தரும் ஆக்கை. "உடம்பு இடும்பைக்கே கொள்கலம்" என்பார் நாயனாரும். சாறு பிழிந்த சக்கை - சத்து நீங்கிய உடம்புக்கு உவமை.

யாக்கை நிலையாமையை உணர்ந்ததும் அறத்தினை அறியவில்லையே என்று இரங்கியவாறு.

262 அறம்அறி யார்அண்ணல் பாதம் நினையுந்
திறம்அறி யார்சிவ லோக நகர்க்குப்
புறம்அறி யார்பலர் பொய்மொழி கேட்டு
மறம்அறி வார்பகை மன்னிநின் றாரே.

அறம் அறியார் - உலகில் பலர் அறம் இன்னதென்று அறிகிலர். அண்ணல் பாதம் நினையும் திறம் அறியார் - அறத்தின் பயனாக விளங்கும் இறைவன் திருவடியை எண்ணும் முறைமையையும் அறியவில்லை. சிவலோக நகர்க்குப் புறம் அறியார் - சிவநகருக்குப் பக்கமாகிய சொர்க்காதி நிலைகளையும் அறியார்.

பலர் பொய்மொழி கேட்டு மறம் அறிவார் - உலோகாயதர் கூறும் பொய்மொழி கேட்டு இவ்வுலகப் பொருளை விரும்பிப் பாவ காரியங்களைச் செய்வார். பகைமன்னி நின்றாரே - அதனால் பிறப்பு இறப்பாகிய பகையினைப் பொருந்தி நின்றார்கள்.

அண்ணல் பாதம் நினைதலாவது, தியானம். சிவலோகநகர், முடிந்தபதம். புறம், சொர்க்காதிபதம். மறம், பாவம். பகை, பாவத்தின் பயன்.

அறம் செய்யாதவர் பிறப்பு இறப்பில் பட்டுழல்வர். 3

263 இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாக முரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே.

இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும் - இருமலும் சோகையும் கோழையும் சுரமும். தருமம் செய்யாதவர் தம் பாலதாகும் - தருமம் செய்யாதவரைச் சென்றடையும். உரும் இடி நாகம் உரோணி கழலை - திடீரென்று மரணத்தை விளைக்கும் மின்னலும் இடியும் பாம்புக் கடியும் தொண்டை நோயும் வயிற்றுக் கட்டியும். தருமம் செய்வார் பக்கல் தாழகிலாவே - தருமம் செய்பவர் பக்கம் அணுகா.

சோகை - இரத்தக் குறைவு. இருமல் முதலியன அடைந்தாரை மெல்லக் கொல்வன. உருமிடி முதலியன திடீரென மரணத்தை விளைவிப்பன என்ற வேறுபாட்டை உணர்க. இவையும் அறம் செய்யாரை அடையும்.

அறம் செய்யார் எய்தும் பயன் கூறியவாறு. 4

264 பரவப் படுவான் பரமனை ஏத்தார்
இரவலர்க் கீதலை யாயினும் ஈயார்
கரகத்தால் நீரட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தில் நிற்றிரோ * நல்நெஞ்சி னீரே.

பரவப் படுவான் பரமனை ஏத்தார் - உலோகாயத மதத்தின் போதனையால் தமது புகழை விரும்பி நிற்பார் இறைவனை வழி

பாடபேதம்: * நாள்நெஞ்சி.

படமாட்டார். இரவலர்க்கு ஈதலையாயினும் ஈயார் - இனி, தம்மை நோக்கி வந்து யாசித்தவர்களுக்குச் சிறிதளவும் கொடுக்கமாட்டார். கரகத்தால் நீரட்டிக் காவை வளர்க்கார் - வழிப் போக்கர் தங்கச் சரீரப்பிரயாசை கொண்டு குடத்தினுல் நீர் விட்டுச் சோலைகளை வளர்க்கவும் செய்யார். நரகத்தில் நிற்றிரோ நல் நெஞ்சினீரே - இத்தகைய நல்ல எண்ணம் கொண்டவர்களே! நரகத்தில் நிலையான வாசம் விரும்பியுள்ளீர்களா ?

ஈதலை - ஈயின் தலையளவு, சிறுமை குறித்தது. அட்டுதல் - வார்த்தல். பொருள் ஈயாது போயினும் உடல் உழைப்பாவது வேண்டும் என்பது குறிப்பு. நல் நெஞ்சீர், வஞ்சப் புகழ்ச்சி.

அறஞ் செய்யார் நரகத்தில் வீழ்ந்து துன்புறுவர். 5

(தொடரும்)

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

### ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீர்காழி.

பகவானைத் தரிசிப்பது பல வழியில். அதில் ஒன்று ஆலய வழிபாடு. இன்றையதினம் இவ்வூரில் உள்ள மிகப் புனிதமானதும் மிக அழகானதும் ஆன சட்டைநாதசுவாமிகோயிலில் வந்து பகவானைத் தரிசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதுவும் பகவானின் அனுக்ரஹமே. மிகவும் நேர்த்தியான கோவில். உள், வெளிப்பிரகாரங்கள் மனதுக்கு சந்துஷ்டி ஏற்படுத்தியதுடன் ஈசன்பால் ஓர் ஈர்ப்புச் சத்தியால் கவரப்பட்டது. கோவிலை வெகு நேர்த்தியாகவும் மிகவும் சுத்தமாகவும் வைத்துப் பக்த கோடிகளின் அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய ஆதீனத்தில் உள்ள அனைவருக்கும் பகவான் அனுக்ரகம் பரிபூர்ணமாகக் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

(Sd.) T. Srinivasan, I. A. S.
Director of Treasuiriest
Accounts on leave,
Madras.

4—8—72.

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

## வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 31. இதழ் 9. பக்கம் 514 இன் தொடர்ச்சி )

### 53. நக்கீரனைக் கரையேற்றியது

மாரனைப் பொடியாக்கிய மகாதேவர் அந்தணமைந்தனுக்குக் கனகக்கிழியருளிய ஆடலைச் சுவைத்த நாம் இனி அன்னம் உலவும் பொய்கையிலிருந்து கீரனைக் கரையேற்றிய கதையைக் காண்போம்.

பொன்னுர் சடைப் புண்ணியனின் நெற்றிக் கண்ணிலிருந் தெழுந்த வெப்பத்தால் தாக்கப்பெற்ற நக்கீரன் பொற்றாமரைப் பொய்கையுள் வீழ்ந்து துன்புற்றமை கண்டு ஏனைய நாவலர்கள் மனங் கலங்கினர். கீரனில்லாத தமிழ்ச் சங்கம் வேந்தன் இல்லாத குடிமக்கள் ஈட்டம்போல் - நாயகமாமணி இல்லாத உருத்திராக்கக் கண்டிகைபோல்-ஞானமில்லாதவர் கல்விபோலப் பொலிவழிந்து நின்றது.

ஏன்ற வேந்த னிலாக்குடி யீட்டமு மின்கதிர்
கான்ற நாயக மாமணி போகிய கண்டியும்
ஆன்ற ஞான மிலாதவர் கல்வியு மானவே
சான்ற கீர னிலாதவை கூடிய சங்கமே.

சொற்பொருள் வடிவாக விளங்கும் ஆலவாய் மைதழைத்த மிடற்றண்ணல் தம்மோடு வாதுசெய்த கீரன் மிகப்பெரும் பிழை செய்தவனுவான்; இப்பிழையிலிருந்து அவன் உய்வது அரிது என்று புலவர்கள் பேசிக்கொண்டனர்

வெள்ளிமலை பெயர்த்த இராவணன் அதற்குத் தண்டனையும் பெற்ருன். பின்பு அவனே கையில் வீணைதொட்டின்னிசை பாடக் கனிந்த பரமன் அவனுக்குத் திண்ணிய தேரொன்றும், மொய்கொள் வாளொன்றும் கொடுத்து அத்தீங்கைப் பொறுத் தான். அப்படித் தவறு செய்தவர்கள் உய்தலும் அத்தவற்றைப்

பெருமான் மன்னித்தலும் உண்டென்றாலும் இப்போது இக் கீரன் செய்த தீங்கைத் தேவாதி தேவனாகிய சிவபெருமானே இரங்கியருளினாலொழிய யாராலும் போக்க முடியாது என்று பாவலர்கள் பேசிக்கொண்டனர்.

பின் கபில பரணராதிய தெய்வத் தமிழ்ப் புலவர்கள் முக் கண்ணனின் திருவடிகளைத் துதித்தனர். உயிர்களைப் பிழை களிலிருந்து திருத்துவோனே சரணம். மறைகளின் சென்னி யில் நடமிடும் பாதனே சரணம். வேதங்களின் பொருளாக உள்ளவனே சரணம். திருவாலவாயில் உறையும் ஒப்பற்ற தெய்வமே சரணம்.

விடைமேல் வரும் அழகனே ! பல்லுயிர்க்கும் தாயும் தந்தையு மாகி அருள் வழங்குகிறாய். நின்னருளின் தன்மை ஆதவனின் வெயிலைப் போன்றது. நல்ல, தீய இயற்றிய உயிர்கள் நன்மை தீமை அனுபவிப்பது இயல்பே. சூரியனின் கதிர் வேண்டு மென்றே நன்மையையோ—தீமையையோ செய்வதில்லையல்லவா! - என்று பரனை வணங்கினார்கள். பின்பு அத்தனே ! கீரன் தான் கற்ற கல்விச் செருக்கினால் அறிவழிந்து நின்னுடைய மேன்மை யான கவிதையைப் பழுதென்று விதண்டையால் கூறினான். நீரும் நெற்றிக் கண்ணைத் திறக்கவே அதன் வெம்மையைப் பொறுக்க முடியாமல் பொற்றாமரைக் கயத்தில் விழுந்து கிடக் கிறான். கறுத்த கண்டங்கொண்ட கருணையாளனே ! கீரனின் பிழையைப் பொறுத்து அவனுக்குக் கருணைசெய்க என்று வேண்டி நின்றனர்.

க்ஷீரக் கடலில் (பாற்கடல்) இருந்து தோன்றிய ஆலத்தை மிடற்றில் கொண்ட அந்தணன், கரும்பு போல் இனிக்கும் மொழிகளைப் பேசுகின்ற உமையம்மையோடு எழுந்துவந்து செம்பொன் நளினப் பூந்தடத்தருகில் புலவர் குழாத்துடன் நின்றான். அனற்கண்ணால் நோக்கிய அவரே இப்போது அருட் கண்ணால் பார்க்கப் புனற்கணே கிடந்த கீரன் பொறி புலன் கரண மெல்லாம் சிவமாய்த்திகழ அன்புருவமாய் வெளியில் வந்தான்.

போதையார் புவனமீன்ற புனிதையார் பரஞானப் பூங்கோதையார் குழற்குத் தீங்கு கூறிய நாவை அவரையன்றி வேறுயார் பொறுப்பாரென்று திருக்காளத்திக் காதையார் குழையினாற்கு, காளத்தி - கயிலை என்று மாறிமாறிவைத்துப் பாடிய அந்தாதியைக் கீரன் சூட்டினான். அந்நூல் கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியென்று வழங்கப்படும். நக்கீரன் இதனைப்

பாடி வணங்கவும் இறைவன் நேர்வந்து கீரனின் கையைப் பற்றிக் கரையேற்றினான். அப்பெருமானுடைய ஆற்றல் எவ்வளவிற்று தெரியுமா ! தன் தாளைத் தந்து பிறவிக் கடலில் அழுந்தும் உயிர்களைக் கரையேற்றிப் பேரின்பம் நல்குபவன் அவனே என்றால் போதுமே ! வேறென்ன கூறவேண்டும்.

## கோபப் பிரசாதம் :

கைதந்து கரையேற்றிய தெய்வத்தையும் மைதந்த அங்கயற் கண்ணம்மையையும் நன்கு வந்தித்து, தீங்கு செய்தோர்க்கும் அருளும் அவர்களின் வள்ளன்மையை நினைந்து தனியாக ஒரு நூல் பாடினார் நக்கீரர். இந்நூலில் இறைவனது கோபத்தையும் அவனது அருளையும் மாற்றி மாற்றியமைத்துப் பாடுகிறார்.

அறனில்லாத தக்கனின் வேள்வியை அழித்த ஆண்மையை வாழ்த்துவதோடு சண்டீசருக்கருளிய மாண்பைத் துதிக்கிறார். கூற்றுவனை வதைத்த திறத்தினைப் போற்றிய பின்பேயே மார்க்கண்டேயருக்கு அருளிய தன்மையைப் பேசுகிறார்.

சலந்தரன் உடலங்கிழித்த சக்கரப்படையானே என்பார். மாயோன் வழிபட மன்மதனை உயிர்ப்பித்தாயே என்று ஏத்துவார். செங்கமலப் புத்தேளாம் பிரமனின் சிரம் கொய்த சேவகம் கூறிச் சிலந்திக்கு மகுடஞ்சூட்டி அரசருளிய செயலை (சிலந்தி - கோச்செங்கணச் சோழனாகப் பிறந்தது ) நினைப்பிப்பார்.

திரிபுரம் எரியச் சிரித்த செய்கையை, அம்முப்புர அசுரர்களுக்கு அருளிய தலைமைச் செயலோடு இணைத்துக் கூறுவார். மன்மதனை அழித்தவனும் நீ - இரதிவேண்ட அவனுக்கு உயிர் தந்தவனும் நீயே யென்று பாடுவார்.

நகைத்துவந்த வெண்டலையைத்திருகித் தலையிலே கொண்ட திறம்நினைந்து, கோயிலில் அணையும் நிலையிலிருந்த சுடரைத் தூண்டிய எலிக்கு மூன்றுலகத்தையும் ஆளக்கொடுத்த (மகாபலிச்சக்ரவர்த்தி வரலாறு) தகைமையில் உளம் பூரிப்பார்.

மேருவைப் பெயர்த்தவனின் தலையை நெரித்த வீரத்தையும், பின் அவன் வருந்திப்பாட அருளிய பெருமையையும் நினைவூட்டுவார். செருக்கொடு தேடிய பிரமனும் திருமாலும் காணமுடியாதபடி நிமிர்ந்த திறத்தையும், தருக்குவிட்டு அவர்களே பூசை செய்ய நேர்நின்ற செம்மையையும் எண்ணுவார்.

கொடிய யானை, பன்றி, புலி, சிங்கம், மீன், ஆமை, வாமனன் இவர்களை வென்றதோடு குரங்கு, பாம்பு, எறும்பு, நாரை, கோழி அலவன், தேரை, கரிக்குருவி இவைகளுக்கு அன்பு காட்டி ஆட் கொண்டிருக்கிறுர் என்பார்.

இவ்வளவையும் கூறிக் கடைசியாக இறைவனுடைய கோபமும் பிரசாதமும் எளியேனளவிலும் கிடைத்து என்னையும் உய்வித்தனவே என்று உளமுருகித் துதித்து நின்ருர் பின்னரும் இறைவனைப் பெருந்தேவபாணி - திருவெழுகூற் றிருக்கை என்னும் நூல்களால் பாடினுர் நக்கீரர்.

அவர்பால் உளமிரங்கிய இளமதிச் சடையான், நீ முன்பு போல் நாவலர் குழாத்திடை நன்னூற் புலவனுய் விளங்குவாய் என்றருளிச்செய்து தன் தேவியோடும் விண்ணிழிவிமானத் தினுள்புக்கு மறைந்தான். கீரனும் மற்றைய புலவர்களும் கழக மண்டபமணைந்து ஆடகக்கிழியை அறுத்துத் தருமிக்குக் கொடுத்தனர். சண்பக மாறனும் பின்னும் பல வரிசைகளைத் தருமிக்குச் செய்தான். பின் ஆலவாய் அண்ணலிடம் முன்னிலும் அன்புகொண்டு பல்பணி நடத்திச் சிறப்புற ஆண்டு வந்தான்.

(வளரும்)

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

### ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீர்காழி.

சமயபுரம் ஸ்ரீ உஜ்னி ஓம்காளி தேவஸ்தானம் சமயபுரம் இராமநாத சுவாமிகள் அவர்கள் பரிதாபி வருஷம் ஆடிமாதம் ஞாயிற்றுக்கிழமை பிரதேஷமம் காலத்தில் ஆகம சாஸ்திரப்படி காலபூசை நடைபெற்றதைத் தரிசித்தார்கள். அந்த காட்சியை மிகவும் சந்தோஷத்துடன் ரசித்தோம். ஆலய அதிகாரிகள் சிப்பந்திகள் சிறப்பாக உபசரித்தார்கள். இவ் ஆலயம் வெகு சீக்கிரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறப் பிரார்த்திக் கின்றேன்.

(ஓ-ம்.) சமயபுரம் சுவாமிகள் சொல்படி

23—7—72. சோமசுந்தரம்.

சிறுகதை

# இறைவன் சிரிக்கின்ருன்!

செஞ்சொற்கொண்டல், புலவர்
திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.,

" ஐயா! ஐயா!"

வாயிற்புறத்திலிருந்து குரல் வந்தது.

" யாரது? உள்ளே வரலாமே" என்று கூறியபடியே எழுந்து நின்றுகொண்டார் புலவர் அடியார்க்கு நல்லார். " வணக்கம் " என்று இருகரங்களையும் குவித்துக் கொண்டே உள்ளே நுழைந்தார் வந்தவர். பளபளக்கும் பட்டுச் சட்டையும், சரிகை வேட்டியும், மேலே நீளமான துண்டும், 'தங்கபிரேம்' இட்ட மூக்குக் கண்ணுடியும், தடித்த தோற்பையும், வெற்றிலைப் பாக்குப் போட்டுச் சிவந்த வாயும், அதன்மேல் அரும்புபோல் வெட்டி அழகு செய்யப்பட்ட மெல்லிய மீசையுமாக - வந்தவர்க்கு வயது ஐம்பது இருக்கலாம்; ஆனல் பத்து வயதைக் குறைக்கும் அளவிற்கு அவருடைய ஒப்பனையும் பிறவும் இருந்தன. புலவர் " வணக்கம் " என்று கூறி இருக்கையில் அமரச் செய்து தாமும் அமர்ந்து கொண்டார்.

" நான் முல்லைபத்திரிகை அலுவலகத்திலிருந்து வருகிறேன்; தங்களைக் காண வேண்டும் என்று நீண்ட நாளாக விருப்பம் " என்று கூறியபடிச் சிரித்தார் வந்தவர்; முன்புறமிருந்த பல் வரிசையில் கட்டியிருந்த தங்கப்பல் பளிச்சிட்டது; அது ஒளி காட்டுவதற்காகவே அவர் சிரிப்புச் செயற்கையாக இருந்ததை அடியார்க்கு நல்லார் நோக்காமல் இல்லை.

" அப்படியா? மிக்க மகிழ்ச்சி; நானும் தங்கள் பத்திரிகை பற்றிக் கேட்டிருக்கிறேன்; தாங்கள்தான் முல்லையின்..." என்று நிறுத்துவதற்கு முன்பாகவே, வந்தவர் " ஆசிரியர் அல்ல; உரிமையாளர் " என்று அவசர அவசரமாக முடித்தார். 'ஆசிரியர்' என்ருல் ஊதியத்திற்கு வேலை பார்ப்பவர் என்ற அலட்சியமும், உரிமையாளர் என்ருல் வரும் ஆர்வச் செருக்கும் அவருடைய விடையில் இருந்தமையைப் புரிந்து கொண்டார் புலவர்.

" எங்கள் முல்லையில் தாங்கள் எழுதும் இலக்கியச் செல்வங்கள் தொடர்ந்து வெளிவர வேண்டும். அண்மையில் தாங்கள் வெளியிட்டுள்ள இலக்கியமாகிய 'இறைவன் சிரிக்கின்றான்' என்ற கவிதை நூலைப் படித்ததிலிருந்து தாங்கள் எங்கள் அலுவலகத்திலும் ஆசிரியராக அமர்ந்து, தொடர்ந்து எங்கள் ஏட்டிலும் எழுதவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது" என்று கூறியவாறே தம் தோற்பையைத் திறந்து பத்து ரூபாய்க் கட்டு ஒன்றை எடுத்து மிகச் சாதாரணமாகப் புலவரின் மேசைமேல் வைத்து, " இது முன்பணம் " என்று கூறியவர் தம் கடைக் கண்களால் புலவர் முகத்தின் குறிப்புக்களை நோக்கினார்.

அடியார்க்கு நல்லார் மிகச் சாதாரணமாக இருந்தார். முல்லை உரிமையாளர் பேச்சையோ, அவரது கரங்களால் எடுக்கப் பட்டுத் தம் மேசை மீது 'பட்டொளி வீசிக் கிடந்த பத்து ரூபாய்க் கட்டையோ, அவர் சிறிதும் பரபரப்பு இல்லாமல் நோக்கினார். பிறகு, தம்முடைய அகலமான நெற்றியைச் சுருக்கித் தம் மோவாயைக் கரத்தால் தடவியவாறே மெல்லப் புன்னகை செய்தார்; அவருடைய கண்கள் தம் எதிர்ப்புறமாகச் சுவரில் மாட்டியிருந்த திருவள்ளுவர் திருவுருவப் படத்தை நோக்கின: 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்ற பொதுமறைப் புலவர் வாக்கு அடியார்க்கு நல்லார் சிந்தனைக்கு வந்தது.

" என்னுடைய 'இறைவன் சிரிக்கின்றான்' என்ற படைப்பைத் தாங்கள் பார்த்திருப்பீர்களே தவிரப் படித்திருப்பீர்கள் என்று நான் நினைக்கவில்லை " – அடியார்க்கு நல்லாரின் சொற்கள் அமைதியாக வெளிவந்தன. முல்லை உரிமையாளர் திடுக் கிட்டார். தம்முடைய போக்குப் புலவர்க்கு எப்படிப் புரிந்தது என்று தெரியவில்லை; ஒரு நூலை அட்டையை மட்டும் பார்த்து அதை மதிப்பிடுவதே தம் பழக்கம் என்பதும், உள்ளே உள்ள செய்திகளை அறிந்து மதிப்பிடுவது தம் பழக்கம் இல்லை என்பதும், பக்கத்துக்கு இவ்வளவு ரூபாய் என்று கணக்குப் போட்டுப் பார்த்து நூலாசிரியர்களுக்குத் தாம் சன்மானம் வழங்கிவருபவர் என்பதும், மாதப் பத்திரிகையில் எழுதுகின்ற அளவுக்குத் தக்கபடியே ஊதியம் தந்துவருபவர் என்பதும், எப்படியாவது புலவரை எட்டியிருக்குமோ என்று உள்ளூரச் சிந்திக்கலானார்.

" நான் அடிமைப்பட்டு வாழாத போக்குடையவன்; என்னுடைய கருத்துக்களைக் காசுக்கு விற்கும் கடப்பாடு எனக்கு இல்லை யென்றாலும், நூலின் அச்சுக்கூலி எவ்வளவோ அவ் வளவுக்குமேல் ஒரு புதுக்காசு கூட நான் விலையாகப் போட

விரும்புவதில்லை. இதனால் இலாப நட்டக் கணக்குப்படி எனக்கு வருமானம் மிகுதியாக இல்லை என்பதும் உண்மையே; இவ்வாறு சில கோட்பாடுகளை மையமாகக்கொண்டு நான் வாழ்ந்து வருவதால் தங்கள் அலுவலகத்திற்கு மாத ஊதியம் பெற்றுக்கொண்டு வந்து வேலை பார்க்க இயலாமைக்கு வருந்துகிறேன் '' என்றார் அடியார்க்கு நல்லார். அவரது மேசைமேல் பத்து ரூபாய்க் கட்டு - குறைந்தது ஐந்நூறு ரூபாய் இருக்கலாம் – கேட்பாரற்றுக் கிடந்தது.

தம்முடைய பேச்சைவிட அந்தக்கட்டுப் புலவர் அடியார்க்கு நல்லாரைக் கட்டிவிடும் என்று புறப்படும்போது போட்ட கணக்குத் தப்பிவிட்டதை எண்ணினர் முல்லை உரிமையாளர்.

" தாங்கள் அப்படி வந்து எழுத இசையாவிட்டால் இங்கு இருந்தபடியே..."

'' இங்கிருந்தபடியே...? " – புலவர் வினைக்குறிப்புடன் அகல விழித்தார். அவரது விழிகளின் கூர்மைக்கு முன்னாலே நெளிந்தார் வந்தவர். '' இங்கிருந்தபடியே, ஏதாவது பழைய இலக்கியத்திற்கு, உரை எழுதித் தந்தீர்களானல், அதை என் பெயரில் அச்சிட்டுக்கொள்கிறேன். தங்கள் பெயரில் வராமல் இருக்கும்; தங்கள் வருமானத்திற்கும் குறையாமல் இருக்கும். ஓர் உரை நூலுக்கு அறுநூறு ரூபாய் என்று போட்டுத் தருகிறேன். இந்த ஆண்டிற்குள் ஐந்து நூல்களுக்கு உரை எழுதிக் கொடுத்தால், மூவாயிரம் ரூபாய் தங்களுக்கு மொத்தமாகக் கிடைத்த மாதிரியும் இருக்கும் '' என்று தொடர்ந்தார்.

மூவாயிரம் ரூபாய் ! – இந்தத் தொடர் நேற்றுக்காலை வந்த கடிதத்தைப் புலவர்க்கு நினைவூட்டியது. சென்ற வாரம் தமது மகள் எழிலியைப் பெண் பார்க்க வந்த பிள்ளை வீட்டுக்காரர்கள், திருமணத்தைப் பெண் வீட்டில் நடத்துவதுடன் மூவாயிரம் ரூபாய் கையில் தந்தால் மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தலாம் என்ற குறிப்புடன் எழுதிய கடிதம் அது. நான்கு ஆண்டுகளுக்குமுன் பள்ளியிறுதித் தேர்வு பயின்று, பிறகு மேற்கொண்டு படிக்க வைக்கப் பொருளாதார பலம் இல்லாமையால் வீட்டில் இருந்துவரும் மகள் எழிலி; புலவரின் திருக்குறள் ஈடுபாட்டைத் தன் பெயரால் விளக்கும் அவருடைய அன்புமகள் எழிலி; ஓய்வு நேரத்தில் எழிலிக்கு அறிவுச் செல்வத்தைத் தர முடிந்ததே தவிர, புலவர்க்குப் பொருட்செல்வத்தைச் சேர்த்துத் தர இயலவில்லை. ஒரே மூச்சாக மூவாயிரம் ரூபாய்க்கு எங்கே போவது ? என்று நின்றுவிட்ட புலவர் சிந்தனை இப்போது நிமிர்ந்தெழுந்தது.

"அப்படியா? மூவாயிரம் தேறுமா" என்ருர் அடியார்க்கு நல்லார். அவர் தம்முடைய வலையில் அப்போதே விழுந்துவிட்டது போலவும், தம்முடைய பெயரில் ஐந்து நூல்கள் அப்போதே வெளியாகி விட்டதுபோலவும், தம்முடைய நூல்களுக்கு 'நாடு தெரிந்த' பிரமுகர் ஒருவர் வெளியிட்டு விழாச் செய்வது போல வும், 'உரை விளக்க அரசு' என்ருே, ஏதேதோ பட்டங்கள் பெறுவது போலவும் கற்பனைகளை அடுக்கடுக்காகச் செய்து மகிழலானுர் வந்தவர்; ஏன்? அவருடைய கைப்பையில் அப் போது பச்சை நோட்டுக்கள் மிக அதிகமாகவே இருந்தன.

"மூவாயிரம் ரூபாய்க்கு என் அறிவுச் செல்வத்தைக் கடன் வாங்க எண்ணுகிறீர்கள்; அவ்வளவுதானே?" — புலவரின் குரல் அவரைக் கற்பனையுலகிலிருந்து மண்ணுலகிற்குக்கொண்டு வந்தது.

"அவ்வளவுதான்; அவ்வளவேதான்" என்று அசட்டுச் சிரிப்புடன் தம் தோற்பையைக் கரங்களால் தடவிவிட்டுக் கொண் டார் வந்தவர்.

"என்னுடைய எழுத்தையே அவமதிக்கிறீர்கள் நீங்கள். ஐயா! என்னுடைய கருத்துப் பெற்றெடுத்த செல்வம் என் எழுத்து. அது நாட்டை வாழ்விக்க வேண்டுமே தவிர உம் போன்ருேர்க்கு அன்று. 'இறைவன் சிரிக்கின்ருன்' என்ற என் காவியமே இந்த அடிப்படையிலே எழுந்ததுதான். சமுதாயத் தில் நிலவிவரும் போலிப்புலமையை — போலி கௌரவத்தை — போலி நாகரிகத்தை — போலி ஒழுக்கத்தை மனிதன் தன்னுடைய சிறுமதியால் மறைக்கலாம்; மறைக்கவும் முடியும்; ஆனுல் எல்லாம் வல்ல இறைவன் மனிதனின் இந்த அறியாமையைக் கண்டு சிரிக்கின்ருன்; தன்னுடையமகன் தன்னையே ஏமாற்றிக்கொள்ளும் தரங்கெட்ட நிலைக்கு வந்துவிட்டானே என்று வாயாரச் சிரிக் கின்ருன். கனிநறுக்கி உண்ணுவதற்குத் தந்த கத்தியாலே தன் கழுத்தையே வெட்டிக்கொள்கிருனே; வாழ்வதற்கு வழங்கிய அறிவை வீழ்வதற்குப் பயன்படுத்திக் கொள்கிருனே என்ற வேதனையில் சிரிக்கின்ருன்.

என்னுடைய நூலின் அடிப்படைக் கருத்தைப் படித்துணர முடியாமல் வந்துவிட்டமைக்கு வருந்துகிறேன், ஐயா, உங்கள் பொருளாதாரப் பெருக்கத்தால் அறிவை விலைபேசிவிடலாம் என்று வந்திருக்கிற வாணிக நோக்கத்தை எண்ணினுல் எனக்கு வருத்தப்படக்கூட இயலவில்லை; சிரிப்புத்தான் வருகிறது, ஐயா!

சிரிப்புத்தான் வருகிறது!" அடியார்க்கு நல்லார் எழுந்துகொண்டு தம் கரங்களைக் கூப்பினர்; அழகாகப் புன்முறுவல் செய்தார்.

கூசி நெளிந்தார் 'முல்லை' யார்; தாமும் எழுந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது; "உங்கள் 'பத்துக் கட்டு' உங்கள் தோற்பைக்குள்ளே மறுபடியும் பயணம் செய்யலாமே" என்றார் நயமான குரலில் அடியார்க்கு நல்லார்; உணர்ச்சி வசப் பட்டபோதும் நாகரிகம் வழுவிப்பேசத் தெரியாத நல்லமனம் அவருடையது. ஒன்றும் பேசாமல் அந்தக் கட்டை எடுத்துப் பைக்குள் செருகிக்கொண்டார் முல்லையார். "வாழ வழிகாட்டி னேன் நான்; ஏதோ பேசிக் கெடுத்துக்கொள்கிறீர்கள்: வேறு சந்தர்ப்பம் வரும்; அப்போது சந்திக்கிறேன்" என்று வேகமாகக் கரகரத்த குரலில் கூறிவிட்டுத் தம்முடைய சரிகைத் துண்டை உதறி மேலே போட்டுக்கொண்டு திரும்பினர்.

"சந்தர்ப்பம் தங்களைச் சந்திக்க ஏற்படாது என்றே எண்ணு கிறேன்; ஏற்பட்டால் அதுவும் இறைவன் திருவுள்ளம் என்றே கொள்வேன்" என்று கூறினர் புலவர். நடந்து வெளியில் சென்றார் 'முல்லை' இதழ் உரிமையாளர். அடியார்க்கு நல்லார் தம் மேசையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தக வரிசையில் நன்றாகக் கட்டடம் செய்யப்பெற்றிருந்த ஒரு புதிய புத்தகத்தைக் கையில் எடுத்தார்; ஆம்! அது புலவர் அடியார்க்கு நல்லார் அண்மையில் படைத்து வெளியிட்ட "இறைவன் சிரிக்கின்றான்" என்ற அற்புதமான தமிழ்க்காவியம். அதன் முன்னுரைப் பகுதியை மனத்தால் படித்தார் புலவர்; அதில் அவர் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தார்:– "பொக்கமிக்கவர் பூவும் நீருங்கண்டு நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே" என்ற அப்பர் தேவார வரிகளே நான் இந்தக் காவியம் எழுதக் காரணமாக இருந்தன. இப்படித் தான் மனிதனின் சிறுமைகளை, கயமைகளை, இரட்டைவாழ்வை நோக்கி இறைவன் சிரிக்கின்றான் என்பதே இக் காவியத்தால் நான் விளக்க முற்பட்டுள்ள செய்தி"

புலவரின் பூசையறையில் மணிகள் ஒலித்தன. அங்கே அவரது துணைவியார் சிரித்த முகத்துடன் நிற்கும் செந்தூர் முருகன் திருவுருவப் படத்திற்கு வழிபாடு செய்துகொண் டிருந்தார். செந்தூர் முருகனின் சிரிப்பு, இப்போது, இவ்வேளை யில், இன்னும் பொருள் பொதிந்த ஒன்றாகவே அடியார்க்கு நல்லார்க்குத் தோன்றிற்று.

[ 564-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

எனப் பின்வந்தோரும் இந்நிலையையே அவாவி நின்று பாடினமை அறியற்பாற்று.

மூன்றாவது குறள்,

" காண்பா னொளியிருளிற் காட்டிடவுந் தான்கண்ட
வீண்பாவ மென்னாய் விடும் "

எனவரும்.

இதன் பொருள் :- இருளின் - ஒருவன் இருளில் உள்ள பொழுது; காண்பான் - எப்பொருளையும் அவன் காணுமாறு; ஒளி காட்டிடவும் - ஒளியே அவனுக்கு அவற்றைக் காட்டி நிற்கவும்; தான் கண்ட வீண் பாவம் என் ஆய்விடும் - ஒளியின்றித் தானே கண்டுவிட்டதாகக் கருதும் பொய்க்கருத்து உளதாகுமாயின், அஃது அவனுக்கு யாதாய் முடியும்?

விளக்க உரை : 'பேதைமையாய் முடியும்' என்பது கருத்து. பாசத்துட்பட்டு அறிவு இச்சை செயல்களை இழந்து நிற்கின்ற உயிருக்கு யாதொன்றையும் திருவருளே அறிவித்தும், இச்சிப்பித்தும், செய்வித்தும் நிற்கவும், தானே அறிந்தும், இச்சித்தும், செய்தும் வருவதாகக் கருதும் பொய்க் கருத்து உளதாகுமாயின் அஃது அவ்வுயிர்க்குப் பேதைமையாய் முடியும்' என்னும் பொருளைத் தோற்றுவித்து நிற்றலின், இக்குறளும் அவ்வணி.

'பிற பொருளை நோக்குவார்க்கு அவற்றைக் காட்டுகின்ற ஒளிதானே, தன்னை நோக்குவார்க்குத் தன்னையும் காட்டி நிற்றல் போல, உலகத்தை நோக்குகின்ற உயிர்க்கு அதனை அறிவிக்கின்ற திருவருள்தானே, தன்னைநோக்குகின்ற உயிர்க்குத் தன்னையும் காட்டி நிற்கும்; அதற்கு வேறொரு துணை வேண்டா' என்பதும், 'அங்ஙனமாகவே, திருவருளைப் பிறவற்றைத் துணைக்கொண்டாதல், திருவருளின் துணையின்றி உயிர் தானே தனித்து நின்றாதல் அறிதல் இயலாது' என்பதும் இவ்வுவமையால் உணர்த்தப்பட்டன. படவே, 'உயிர் பெத்தத்தில் உலகத்தையும் தன்னையும், முத்தியில் திருவருளையும் தானே அறிவதாக எண்ணுதல் பேதைமையாம்' என்பது போந்தவாறு அறிக.

இவற்றுள் உலகத்தைப் பொருளாகக் கருதும் நிலை பாசம் காரணமாகவும், உலகத்தை விடுத்துத் தன்னையே பொருளாகக் கருதும் நிலை பாசத்தின் வாதனை (வாசனை) காரணமாகவும்

நிகழ்வனவாம். ஆகவே, உலகத்தைப் பொருளாகக் கருதும் பாச நிலை நீங்கியவழியும், பாசத்தின் வாதனை நிலை நீங்காத பொழுது உயிர், 'யானே பரம்பொருள்' என்றுதல், 'யானும் பரம்பொருளோடு ஒருநிகராவேன்' என்றுதல் தன்னையே பொருளாக மதித்து நிற்கும் என்க. இவற்றுள் 'யானே பரம் பொருள்' எனக் கூறுதல் 'ஏகான்மவாதம்' எனவும், 'யான் பரம்பொருளோடு ஒரு நிகராவேன்' எனக் கூறுதல் 'சிவசம வாதம்' எனவும் சொல்லப்படும். இவையும் பேதைமைய வாதலை ஈண்டு அறிந்து கொள்க.

திருவருள், தானே தன்னைக் காட்டினலன்றி அதனை உயிர் தானே அறிதல் இயலாது எனவே, மேல் "தூநிழல்ஆர்தற்கு ஆரும் சொல்வார் தொகும் இதுபோல்" என்றதே பற்றி, 'திருவருள் மர நிழல்போல நின்றுங்கு நிற்பதே; அதனல், உயிரே தனது முயற்சியால் தானே அதனைச் சென்று அடையும்' எனக் கூறும் ஈசுர அவிகார வாதமும் பேதைமைப் பாலதாதல் விளங்கும்.

" காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே " †

என்னும் திருமொழி இக்கருத்தே பற்றி வந்தது.

காண்பான், 'பான்' ஈற்று வினையெச்சம். பாவம்-கருத்து. கண்டதாகக் கருதும் கருத்தினை, 'கண்ட கருத்து' எனக் கூறினமையால் இது, செயப்படுபொருளை வினைமுதல் போலக் கூறியதாம். பொய்யை 'வீண்' என்றார். 'பாசத்தில் நின்றாரிடத்தன்றி, 'அதனின் நீங்கினேம்' என்பாரிடத்தும் இது நிகழுமாயின், அஃது அவர்க்குப் பெரியதோர் இழுக்காம்' என்பார், 'பேதைமையாம்' என்னது, 'என்னய்விடும்' என அவலந் தோன்றக் கூறினர். 'ஆய்விடும்' என்பது ஒருசொல் நீர்மைத்து. 'எந்நாள் விடும்' என்பது பாடமாயின், 'இக் கருத்து இவ்வுயிர்க்கு என்று நீங்குவதோ' என இரங்கிக் கூறியவாருக உரைக்க. 'பாவம்' என்பதற்குப் பலரும் 'தீவினை' என்றே உரைத்தனர்; அஃது இவ்விடத்திற்குச் சிறவாமை அறிந்துகொள்க.

இதனல், 'பெத்தம் முத்தி இரண்டிலும் தனக்குத் துணை யாய் நின்று உதவும் திருவருளை உயிர் மறத்தலே அதற்கு மாசாவது' என்பதும், 'ஆகவே, அம்மாசு முற்ற நீங்காது சிறிது நிற்பினும், உயிர்க்குத் தூய்மை கூடாது' என்பதும் கூறப் பட்டன.

(தொடரும்)

---

† திருமுறை – 6 - 95 - 3.

உ

குருபாதம்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

ஆவணிமூலத் திருநாளில் வழங்கியருளிய

# ஆசியுரை

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய்!

அருளுடைச் சுடராய், அளிந்ததோர் கனியாய், பெருந்திறல் அருந்தவர்க் கரசாய், பொருளுடைக் கலையாய், புகழ்ச்சியைக் கடந்த போகமாய், யோகத்தின் பொலிவாய், தெருளிடத்து அடியார் சிந்தையுள் புகுந்த செல்வமாய், நமக்குத் தோன்றாத் துணையாய் அருள் வழங்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

அடியார் என்னுஞ் சொல் எல்லா உயிர்களையும் குறிப்பது அன்று. தேர்ந்தகலைஞானத் தெளிவுடையாரே அடியார் எனப் படுவர். அத்தகு அருளாளர்களையே 'நடமாடுங் கோயில் நம்பர்' எனத் திருமூலர் குறிக்கிறார். இறைவன் அருள்எண்ணி வியக்கும் அத்தகு அடியார்களுக்கு இறைவன் எளிவந்தவனாய் அருள் புரிவார் என்பதனை விளக்குவதே இவ்வாவணிமூலப் பெருவிழா.

ஒருசில அடையாளம் உடையவர்களே அடியார்கள் என்று எண்ணுவது அசம்பாவிதம். எல்லா மனிதர்களும் ஒரே தன்மை யுடையவர்களல்லர். மேருமலை வேறு - சாதாரண மலைகள் வேறுதான் என்பதை உலகியலில் அறியலாம். உலகில் ஏற்றத் தாழ்வுகள் இயற்கையானதாகும். அதனை அறிந்திருந்தும்

மாயா உலகம் மயங்குகின்றது. அவற்றை எல்லாம் விளக்க வேண்டுவது எம்மனோர் கடமை.

இறைவன் தாழ்நிலையில் உள்ள உயிர்கள் மாட்டும் கருணை பூண்டு அருள் வழங்கினார். உயர்ந்தார் - தாழ்ந்தார் என்று நோக்காது, உயிர்களின் தகுதி அறிந்தே இறைவன் கருணை மலர்கிறது. பன்றிக்குட்டிக்கு அருள்சுரந்த வரலாறு இறைவனின் அருளை விளக்கவல்லது. அதிலும், எல்லாப் பன்றிகளுக்கும் அருள் கிடைத்துவிடவில்லை. பூர்வஜன்ம புண்ணியமும் தகுதியும் பெற்றதனால்தான் பன்றிக்கு இப்பேறு கிடைத்தது. இறைவன் அருள்செய்ய என்றும் காத்திருக்கிறார்; நாம்தான் அத் தகுதிக்கு உயர்வதில்லை. நல்ல பண்புள்ள உயிர் கிடைக்காததால் இறைவன் ஏங்கித் தவிக்கிறார்.

பிட்டு வாணிச்சியாய், யாருமற்ற அனாதையாய், அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் அன்னையவள் தரும்பிட்டுப்பிட்டுண்டு தலையன்பில் இறைவன் கட்டுண்டார் என்றால் அவர் பெருமையை எண்ணவேண்டும். பல பெருஞ்செல்வர்கள் அக்காலத்தும் இருந்திருப்பார்கள். ஆனால் அவர்கட்கெல்லாம் இறையருள் கிடைக்கவில்லை. அன்பு நிறைந்த - ஆண்டவனின் கருணை உணர்ந்த ஆன்மாவிடம் இறைவன் கருணையாக இருந்ததையே இவ்வாவணிமூல விழா நமக்கு உணர்த்துகின்றது.

ஒரே கல்லில் இருமாங்காய் அடிப்பதுபோல ஆண் - பெண்ணாக விளங்கும் உலகில் இருசாரார்க்கும் ஒருசேர இறைவன் அருள் வழங்குகிறார். உலகம் சிவமும் - சத்தியுமாய் விளங்குகின்ற உண்மையை இவ்வருளிப்பாடுகள் நமக்கு உணர்த்துகின்றன. மாணிக்கவாசகர்பொருட்டு வந்திக்கு அருள்பாலிக்கிறார்; திருநாவுக்கரசரை - திலகவதியாரைக் கொண்டு உய்விக்கிறார் திருஞானசம்பந்தர் பெருமையை - குலச்சிறையார் - மங்கையர்க்கரசியார் அன்போடு இணைத்து அருளுகிறார்.

பண்சுமந்த பாடலுக்கு ஏங்கித்தவிக்கும் இறைவன்புண்ணைப் பரிசாகப் பெற்றார் இவற்றைப் பழங்கதையாக நாம் பேசவில்லை. எதனையும் உழைப்பால் பெறவேண்டும் என்ற எண்ணத்தை வாழ்வில் மேற்கொள்ளவே இவ்விழாவை மதுரையிலும், மதுரையையே ஒத்த தருமையிலும் கொண்டாடுகிறோம். 'தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசுவீற்றிருந்து' என்ற குமரகுருபரர் வாக்கு இதனை மெய்ப்பிக்கிறது. மதுரையிலும் சொக்கேசன், தருமையிலும் சொக்கேசன்! மதுரையிலே சித்திவிநாயகர், தருமையிலும் சித்திவிநாயகர்!

இதனைப் பாராட்டு விழாவாக - புலவர்களைப்போற்றும் புனிதவிழாவாகக் கயிலைக் குருமணி அவர்கள் பட்டமளித்துப் பாராட்டிச் சிறப்பித்து வந்தார்கள்.

நமது குன்றக்குடி திருமடத்தின் அருளாட்சிக்கு உட்பட்ட திருப்புத்தூர் தேவாரத்தில் நாவரசர்பெருமான் இறைவன் தருமிக்குப் பொற்கிழி அளித்தருளிய மதுரைத் திருவிளையாடலைச் சிறப்பித்துப் பாடுகிறார்.

" நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண் "

என்பது திருத்தாண்டகம்.

ஒரு சிவாசாரிய இளைஞன், இறைவனின் திருமேனி தீண்டிப் பூசிப்பதற்குப் பிரமசரியம் தடையாக இருக்கிறது என்ற உயர்ந்த நோக்கில் இறைவனிடம் பொருள் வேண்டுகின்றான். இறைவன் தகுதி அறிந்து வந்து உதவி செய்கிறார். தருமி திருமணத்திற்குப் பொருள்தந்த நோக்கத்தை ஆழச் சிந்தித்தால் இறைவன் திருவுள்ளம் புலப்படும்.

திருமணம் ஒரு புனிதமான நிகழ்ச்சி. பலர்க்கு அதன் நோக்கம் தெரிவதில்லை. ஐந்தாறு உயிர்களை ஈன்று பாதுகாக்கும் புனிதப் பணியிலேயே இறைவன் திருமணத்தைப் படைத்து ஒருசுவை வைத்து உயிர்களை இயக்குகிறார். எதையும் விருப்போடு நாம் செய்ய வேண்டும் என்பதை ஊன்றி நோக்கினால் திருமணத்தத்துவம் நன்கு புலப்படும். இவ்வடிப்படையில் தான் இறைவன் அருள் தருமிக்குக் கிடைத்தது. எனவே, இத் திருவிளையாடல்கள் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்ய உயிர்களை ஊக்குவிக்கவே என்பது விளங்குகிறது.

இவ்வாதீனத்தின் 24 ஆவது குருமகாசந்நிதானமவர்கள் பதினான்கு பெருமக்களை ஆதீனப்புலவர்களாக ஏற்றருளினார்கள். நமது ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் இருபத்தொரு பெருமக்களுக்குப் பட்டமளித்துச் சிறப்பித்தார்கள். அவ்வகையில் இவ்வாண்டு எல்லாவகையிலும் சிறப்பு வாய்ந்த அன்பர் சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்களுக்குச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் சொக்கநாதப் பெருமான் சந்நிதியிலேயே 'மும்மொழிக்கொண்டல்' என்றபட்டம் வழங்கப்பெற்றிருக்கிறது.

ஔவையார் ஒருவரா பலரா என்ற ஐயப்பாடு நம்மிடையே உண்டு. சம்பந்தர் என்றபெயர் பலகாலத்தே பெருமக்கள் பலர்க்குத் திருப்பெயராக அமைந்திருக்கிறது. இப்பெயர் வேறு பாடுகளை நம்முன்னோர்கள் தெளிவான அடைமொழிகள் மூலம் வேறுபடுத்திக் காட்டியிருக்கிறார். திருஞானசம்பந்தரே சம்பந்தர் என்ற பெயருக்கு முதலாமவர். அம்மை குழைத்தூட்டிய சிவ ஞானம் கைவரப்பெற்றமையின் திருஞானசம்பந்தர் என வழங்கப் பெற்றார். சந்தானசாரிய பரம்பரையுள் மூன்றாமவர் மறைவல்ல திறத்தால் மறைஞானசம்பந்தர் என வழங்கப்பெற்றார். நமது தருமையாதீனமுதற்குரவராக விளங்கியவர்கள் குருபீடம் நிறுவி யமையின் குருஞானசம்பந்தர் எனப் பெயர்பெற்றார். நமதுசைவ மரபே எல்லாம் ஞானசம்பந்தம் உடையதுதான். தருமையாதீனக் குருமகாசந்நிதானங்கள் கையொப்பமெல்லாம் 'ஞானசம்பந்தம்' என்பதுதான் ; அதன் நோக்கமே இப்பீடத்தில் எழுந்தருளும் மகாசந்நிதானங்கள் யாவரும் ஞானசம்பந்தராகவே கருதப் படுவார்கள் என்பதே.

நாம் ஞானபீடமேறிய பிறகு முதன் முதலில் ஒரு ஞான சம்பந்தத்திற்குப் பட்டம் வழங்க வாய்த்திருப்பது திருவருட்செய லாகவே அமைந்தது.

இன்று சிறப்புப் பெற்ற அன்பர் சமஸ்கிருதத்தில் எம். ஏ., பட்டம் பெற்றவர்; ஆங்கிலமும், பின்னால் தமிழும் கற்றுத் தேர்ந்தார்; நிர்வாகத் திறன் மிக்கவர். அடிக்கடி பூசல் நடைபெற்றுக்கொண்டிருந்த திருவையாறு கல்லூரிக்கு, சென்னை மாநிலக் கல்லூரியில் இருந்து மாற்றலாகிவந்து ஐந்தாண்டுக் காலம் அமைதியாக நடத்திச்சென்றார். இத்தகு திறன்மிக்க வரைப் பல்கலைக் கழகப் பதிவாளராகத் தேர்ந்தெடுத்த தமிழக அரசைப் பாராட்டுகிறோம்,

வடமொழியில் கவி இயற்றும் வல்லமை மிக்கவர். வரம் போடு உபகாரியாக இருப்பவர். தம்மால் இயன்றதைச் செய்ய அஞ்சாத குணநலம் அவர்க்குரியது.

அவரது ஊர் குணமங்கலம் என்பது. அவ்வூர்ப் பெயர்ப் பண்பு அவரிடம் உள்ளது. அவர் தந்தை பெரியபெருமாள் பிள்ளை சிறந்த சிவபக்தர் ; சிவனடியார்களைப் பேணுபவர். சிவானந்த முனிவர் முதலாய அடியார்களுக்குப் பொருள் உதவிய பெருமை மிக்கவர். தம் புதல்வர்களுள் ஒருவரைத் தமிழுக்கும், ஒருவரைச் சமஸ்கிருதத்திற்கும் அவர் தந்தை அளித்தார்.

தற்காலத்தே தமிழ் கற்றவர்களுள் பலர் தங்கள் பிள்ளைகளை B. Com., M. Com. போன்ற பட்டப் படிப்புக்களில் செலுத்துகிறார்கள். இவர்களாலெல்லாம் தமிழ் வளராது. உண்மையில் இறைவனே தமிழை வளர்த்து வருகிறார்.

கிருத்துவர்கள் தங்கள் பிள்ளைகளுள் ஒருவரைச் சமயத்திற்கு அளிக்கிறார்கள். அதுபோலச் சைவர்களும் சமயவளர்ச்சிக்குத் தங்கள் பிள்ளைகளுள் ஒருவரை ஆட்படுத்தவேண்டும்.

வித்தகம் பேசாது, பணி செய்துவரும் மேகம் ஒத்த அவர்களுக்கு 'மும்மொழிக்கொண்டல்' என்ற பட்டத்தை ஸ்ரீகுருஞான சம்பந்தர் வாயிலாகவும் ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் அருள்துணைக் கொண்டும் வழங்கும் வாய்ப்பை இறையருள் இன்று கூட்டி வைத்திருக்கிறது.

இன்று நமது ஆதீனப் பல்கலைக் கல்லூரியின் ஆண்டு விழாவும் இவ்விழாவோடு இணைந்து நடைபெறுகிறது. அக்கல்லூரியிலேயே பயின்ற நாம் அதனை நிருவகிக்கும் பொறுப்பையும் ஏற்று நடத்தும்படித் திருவருள் கூட்டியிருப்பதாகவே கருதுகிறோம்.

இன்று பட்டம் பெற்ற நல்லன்பர்க்கும் – ஏனையோர்க்கும் செந்தமிழ்ச்சொக்கன் திருவருள் பெருகப் பிரார்த்திக்கிறோம்.

---

## பார்வையாளர் குறிப்பு

தருமபுரம் ஆதீனம்

ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.

இன்று பாடல்பெற்ற திருக்கடவூர் கோயிலுக்கு வரக்கூடிய வாய்ப்புக் கிடைத்தமைக்கு மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாலயம் மிக செம்மையாகப் பரிபாலிக்கப்பட்டுவருவது போற்றற்குரியது. இதற்கு வரும் வருமானத்தைக் கல்விக்காகச் செலவுசெய்யத் திட்டமிட்டிருக்கும் தேவஸ்தானத்தின் முயற்சியை வெகுவாக வரவேற்கிறேன்.

(Sd) சிட்டிபாபு,

6–8–72. Director of Secondary Education.

# ஆவணிமூலத் திருநாளில்

'மும்மொழிக் கொண்டல்' பட்டம் பெற்ற

சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர்

## திரு. பெ. திருஞானசம்பந்தம்பிள்ளை M. A., L. T.,

## அவர்கள் ஆற்றிய

# உரைச் சுருக்கம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்திவ ணங்குவாம்

இத்திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் விற்றிருந்து அருள்பாலிக்கும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கட்கும், திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களுக்கும், என்னுடைய வணக்கங்களைப்பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அவையில் இருக்கும் பெரியோர்கட்கு வணக்கம்.

இந்த விழாவில் தொடர்புகொள்ளும் பேறுஎனக்குக் கிடைத்திருக்கிறது. 'என்னபுண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்றருளிச் செய்தவண்ணம் யான் பேறுபெற்றவனாகின்றேன். இருபது ஆண்டுக் காலமாக இத் திருத்தருமை யாதீனத்துடன் எனக்குத் தொடர்பு இருந்துவருகின்றது; இன்று எளியேனுக்குப் பட்டமளித்து ஊக்குவித்திருப்பது குருவருட் செயலேயாகும்

எனது பெற்றோர்கள் செய்த தவப்பயனால் எனக்குஇத்தகைய சிறப்புக் கிடைத்துள்ளது. 25 ஆம் குருமகா சந்நிதானம் எனக்கு ஆசிவழங்கி என்னைச் சிவப்பணியில் ஈடுபடுத்தினார்கள்; இத்தகைய சிவபுண்ணியப்பயனால் இப்பட்டம் அடியேனுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று கருதுகிறேன். இப்பட்டமும் பரிசும் பாராட்டும் என்னை நற்பணியில் கொண்டு செலுத்தும் என்று நம்புகிறேன்.

மொழிகளின்பால் வெறுப்புக் கொள்ளுவது தவறு.

" எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பது குறள்.

மொழியைக் காணுமல் மெய்ப்பொருள் காண்பதுவே அறிவுடைமை. தமிழும் வடமொழியும் 2000 ஆண்டுகளாக உயர்ந்த மொழிகளாகப் போற்றப்படுகின்றன. சமயக்கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதில் ஒன்றுக்கு ஒன்று உறுதுணையாய் விளங்கின. உலகில் இறந்துபட்ட மொழிகள் பல. வளம்பெற்ற மொழிகளாகத் தமிழும் வடமொழியும் விளங்குகின்றன. 'ஆரியன்கண்டாய் தமிழன் கண்டாய்' என்ற வாக்கினை நாம் சிந்திக்கவேண்டும். மொழியினுலே சமயம் வளரும் என்ற உண்மையை நாம் உணரவேண்டும்.

மொழியால் சமயஞானம் பெறவேண்டும்; மக்கள் வாழ்வை உயர்த்துவது சமயஞானமே! பொருளினுல் வாழ்வு உயராது. வெள்ளியம்பலவாணர் அருளிச்செய்த நூல்கள்; ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிச்செய்த நூல்கள், திருமுறைகள், ஆகமங்கள் ஆகியவற்றை ஓதுவதால் சமய அறிவு பெற்றுச் சிறக்கலாம். சம்பந்த சரணுலயர் செய்த கந்தபுராணச் சுருக்கம் போன்றவை நமது சமய அறிவை வளர்க்கப் பெரிதும் உதவி செய்பவை. இவ்வாதீனத்தில் தேவார பாடசாலைவாயிலாகவும், வேதாகம பாடசாலை வாயிலாகவும் சமயம் நன்கு வளர்க்கப் படுகின்றது.

வடமொழியிடத்துக் காழ்ப்புக் கொள்ளக்கூடாது. இம்மொழி இந்திய மொழிகள் பலவற்றினுக்கும் தொடர்பு மொழியாய் விளங்கியது; எல்லாச் சாத்திரங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கியது. வடமொழிக் கருத்துக்களை வலியுறுத்திக் கூறுபவர்களைக் கொண்டு வடமொழியை வெறுத்தல் ஆகாது. வடமொழியும் தமிழும் தெய்வமொழிகள்; கருத்தொற்றுமையுள்ள மொழிகள். ஹிப்ரு மொழியைக்கூடக் கடவுள்மொழி எனக் கூறுவர்.

சப்தம், நாதம் - இவையே மொழியாக ஆகும். சப்தம் நான்கு வகையினதாகக் கூறப்படும். இறைவனை ஓசை ஒலியெலாம் ஆணுய்நியே' எனக்குறிப்பதைக் கொண்டு இறைவன் சப்தப் பிரஹ்மம் ஆவதை உணரலாம். ஓம் என்பது நாதம்.

மொழிஒன்றே; அதுவரும் வழிகள்பல. ஸ்ரீகண்டர், அப்பைய தீக்ஷிதர், நீலகண்டர் ஆகியோர் சிவமே பரம் பொருள்

என்பதை நமக்கு உணர்த்தினர். ஆதிசங்கரர் பக்திமார்க்கத்தைப் பெரிதும் வலியுறுத்திக் கூறுகிருர். பக்தியை ஒருகொடியாக உருவகித்துப் பாடியுள்ளார்.

கொடிக்கேற்ற நிலம், கொடியில் உள்ள இலைகள் உதிர்தல், துளிர் விடுதல், மொக்கு விடுதல், பூத்தல் என்றவகையில் உருவகித்துப் பாடியுள்ளார்.

பக்திக்கொடியில் காலத்துக்கு வேண்டாதன என்ற இலைகள் உதிரும்; புண்ணியத்துளிர் தோன்றும்; நற்குணம் என்னும் அரும்பு தோன்றும்; ஜபித்தல் என்ற பூ மலரும்.

ஒருமலர் மணம் பொருந்தியதாக, தேன் நிறைந்ததாக, பழம் தரக்கூடியதாக இருக்கும். பக்திக்கொடிதரும் ஜபித்தல் என்ற மலரால், நன்மைகள் என்ற மணமும் ஞானனந்தம் என்றதேனும் ஞானம் என்றகனியும் பயனுகக் கிடைக்கும். இத்தகைய கருத்துக்களைக் கூறி ஆதிசங்கரர் பக்தி மார்க்கத்தைப் பரப்பியுள்ளார்.

காளிதாசர் சிவபக்தி மிக்கவர்; அவர் தமது பாக்களால் சங்கரனைப் பாடிப்பரவியுள்ளார். இறைவன் திரிலோகநாதன் என்பதை விளக்கியுள்ளார். செல்வச் செருக்கும் அதிகாரச் செருக்கும் இல்லாதவன் இந்தத் திரிலோக நாதன். ஈஸ்வரன் என்ற சொல்லின் பொருள் சக்திவாய்ந்தவன் என்பதாகும்.

மூவுலகுக்கும் இறைவனுயிருக்கிற சிவன்தோலாடைஏற்ருன்; ஊர்தியாகக் காளையைக் கொண்டான்; உமையொரு பாகனுய் இருக்கிற இறைவன் யோகிகளுக்குத் தலைவனுய் விளங்குகிருன்; அனைத்துமாய் இறைவனே விளங்குகிருன்.

எல்லாமாய் விளங்குகிற இறைவனிடத்துப் பக்தி செலுத்தி வழிபட்டு அறியாமைப் பிணியைப் போக்கிக்கொள்வோமாக.

---

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adheenam

Sri Sattanathaswamy Devasthanam, Sirkali.

"I had a good dharsan in this temple. I am well impressed by the divine atmosphere, neat maintenance and the courteous treatment of the authorities of the Devasthanam."

(Sd.) J. Manikkam,

28—8—72. C. T. O. Kumbakonam.

திருவாவடுதுறை ஸ்ரீ கோமுத்தீசுவரர் திருக்கோயில்
மகாகும்பாபிஷேக விழா மலரை வெளியிட்டுத்

# தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆற்றிய

## அருளுரை

குறைவிலா நிறைவே குணக்குன்றே கூத்தனே
குழைக்கா துடையானே
உறவிலே னுனையன்றி மற்றடியேன் ஒருபிழை
பொறுத்தா லிழிவுண்டே
சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்ச் செம்பொனே
திருவாவடு துறையுள்
அறவனே யெனை அஞ்சலென்றருளாய் ஆரெனக்குறவு
அமரர்கள் ஏறே

குறைவிலா நிறைவாய்க் குணக்குன்றாய் வீற்றிருக்கும் திருவாவடுதுறை ஆதீனம் மகாசந்நிதானம் அவர்களே! குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களே! திருப்பனந்தாள் காசிவாசி அவர்களே! அன்பர்களே!

மலரை வெளியிடுமாறு கேட்டுக்கொண்ட சங்கரம்பிள்ளை 'பன்னூறு கும்பாபிஷேகங்கள் செய்த தருமையாதீன மகாசந்நிதானத்தின் திருக்கரத்தால் வெளியிட்டருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நாம் அருளாட்சி ஏற்றுச் சிறிது காலத்தில் இன்னும் ஒரு கும்பாபிஷேகத்தையும் செய்யவில்லை. அப்படியிருந்தும் பலநூறு கும்பாபிஷேகங்கள் நடத்தியவர்கள் என்று அவர் கூறியதில் பொருள் - ஒரு தத்துவம் கூட இருக்கிறது. நமக்குமுன் அருளாட்சி நிகழ்த்திய கயிலைக்குருமணி அவர்கள் பல கும்பாபிஷேகங்களைச் செய்தருளியவர்கள். முன்னோர்கள் செய்த புண்ணியங்கள் எல்லாம் அவர்கள் பரம்பரையில் வருவோர்க்கும் உண்டு. முன்னோர் பட்ட கடன்களும், வருவாய்களும் அவர்களின் பின் வருவோர்க்கு எவ்வாறு உரிமை உடையனவோ அவ்வாறே முன்னோர் செய்த புண்ணிய பாவங்களும் நமக்கு உரிமையுடையன.

சங்க நூல்களில் ஒரு வரலாறு உண்டு. முரசு கட்டிலில் துஞ்சிய மோசிகீரனுர்க்கு அவர் உறங்கும்வரை கவரி வீசினன் ஒரு காவலன் என்று. அதுபோலச் சேதுபதி ஒருவர் உறங்கிய புலவர் ஒருவர்க்குப் பங்கா இழுத்தாராம். புலவர் எழுந்து வருந்தியபோது 'பங்கா இழுத்ததும் முன்னோர்கள் செய்த பாக்கியமே' என்று பாடி மகிழ்ந்தார் என்று கூறுவார்கள்.

அதுபோல நாம் செய்யும் புண்ணிய பாவங்கள் நமக்குப் பின் வருவோர்க்கும் உரிமையுடையன என்று கருதி நாம் வாழ வேண்டும்.

இன்று ஒரு சிறந்த நாள். கோமுத்தீஸ்வரர் ஒப்பிலா முலையம்மை திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழாவைக் கண்டுகளித்துச் சிறந்த சிவபுண்ணியத்தினை ஈட்டிய நிறைவில் நாம் கூடியிருக்கிறோம். அம்பிகை பசுவாக அவதரித்து இறைவனை வழிபட்டு அருள்பெற்றது திருஆவடுதுறை. ஞானசம்பந்தருக்கு உலவாக்கிழி யளித்தவர் இங்குள்ள பெருமான். சித்தர்கள் பலர் தங்கி வழிபட்ட சிறப்பும், திருமூலர் போதியடியில் இருந்து மூவாயிரம் ஆண்டுகள் மோனத்தவம் பெருக்கித் திருமந்திரத்தை நமக்கு வழங்கியதும் இத்தலத்திற்குத் தனிச்சிறப்பைத் தருகிறது.

திருவாவடுதுறை ஆதீனம் மகாசந்நிதானம் அவர்களைக் காணும்போதெல்லாம் அப்பர் பெருமான் நினைவிற்கு வருகிறார். 'சிந்தை யிடையறு அன்பும் திருமேனிதனிலசைவும்' கொண்டு அப்பரடிகள் போலவே விளங்கும் திருவாவடுதுறையாதீனம் மகாசந்நிதானம் அவர்கள் மிகச் சிறப்பாக இத்தலத்தைத் திருப்பணிகள் செய்து மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தியுள்ளார்கள். இவர்கள் அருளாட்சியேற்ற ஐந்தாண்டுக் காலத்தில் திருவிடைமருதூர் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது. மேலும் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் அவதரித்த இடத்தில் ஓர் ஆலயம் எழுப்ப இருக்கிறார்கள். திருப்பெருந்துறைத் திருக்கோயில் திருப்பணி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. விரைவில் இத் திருக்கோயில்களின் குடமுழுக்கு விழாக்களைக் காண இருக்கிறோம்.

திருக்கயிலாய பரம்பரையில் தோன்றிய சைவ ஆதீனங்கள் பதினெட்டு; அவற்றின் ஞானபிதாவாக விளங்குபவர் மெய்கண்டார். மெய்கண்டார் சிவஞானங் கைவரப்பெற்று முத்திப் பேறுற்ற திருவெண்ணெய் நல்லூரிலுள்ள மெய்கண்டார் திருக்கோயிலை மிகச்சிறந்த முறையில் திருப்பணிகள் செய்து மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தத் திருவுளம்பற்றியுள்ளார்கள்.

நல்லறங்கள் பலவும் செய்தற்கமைந்த திருமடங்கள் அவற்றின் கடமைகளைச் செம்மையாகச் செய்து வருகின்றன என்பதை உலகமக்கள் உணர வேண்டும். தனிமனிதன் திருந்தினால் நாடு திருந்தும்; மக்கள் தங்கள் கடமைகளை உணர்ந்து சமயப்பணிகள் செய்து சிறக்க வேண்டும். நிகழ்ந்த மகாகும்பாபிஷேக விழாவையொட்டிச் சைவ சமயக் கோட்பாடுகளையும், பல்வேறு தத்துவங்களையும், தேவார - திருமுறைகளின் பொருள் நலங்களையும் விளக்கும் பல்வேறு பெருமக்களின் கட்டுரைகளோடு கூடிய விழாமலர் ஒன்று வெளியிட்டுள்ளார்கள். துறைசை மகாசந்நிதானம் அவர்கள் விருப்பின்படி இன்று அம்மலரை வெளியிடுவதில் மகிழ்வு கொள்கிறோம்.

# வாழ்த்தும் அஞ்சலியும்

## TIRUCHY Dt. WELFARE COMMITTEE
TIRUCHIRAPALLI

President :
T. D. SUNDARARAJ M.A., I.A.S.
Tiruchy District Collector.

Secretary & Treasurer :
K. A. P. VISVANATHAM
Chairman,
S. M. E S. C. Lit., Tiruchy
31—7—72.

(1) பாராட்டுக் கடிதங்கள் அனைத்தையும் படித்து முடித்த பிறகு கடைசியாக இக்கடிதத்தைப் படிப்பது சந்நிதானத்திற்கு வியப்பளிக்கலாம். அவசரப்பட்டுக் கூட்டத்தோடுசெல்வதைவிடக் காலம் தாழ்த்தியேனும் தனித்துச் செல்வது நல்லது என்பது என் கருத்து. தங்கத் தகட்டில் வைரம் பதித்தது போன்று இன்று தருமை ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. இத்தகைய ஒரு பெரும்பேற்றைத் திருப்பனந்தாளும் பெற்று மகிழும் என நம்புகிறேன்.

(2) இன்று காலை வானொலியில் அறவுரை கேட்டேன். சொல்லும், கருத்தும் தெளிவாக அமைந்திருந்தன. இதே கருத்தை இன்னும் அதிகமாக வலியுறுத்தும் பழம்பாடல் ஒன்று 60 ஆண்டுகளுக்கு முன்பு படித்தது என் நினைவுக்கு வந்தது. அது, "கற்பகத் தரு இருந்தும் அதனை அணுகாமல் எட்டியிருந்தே அது தனக்கு உதவவில்லை என்பதும், நெருப்பு இருந்தும் அதனிடம் செல்லாமல் அது தன் குளிரைப் போக்கவில்லை என்பதும், தண்ணீர் இருந்தும் அதனிடம் போகாமல் அது என் தாகத்தை நீக்கவில்லை என்பதும், கடவுளிடம் மனதைச் செலுத்தாமல் அது தனக்கு அருளவில்லை என்பதைப் போன்றது" என்பது. ஐயங்கொண்டு அறிவுரை கேட்ட மாணவர்க்கு அருள்கொண்டு வழங்கிய குருவுரையாக அமைந்துள்ளது.

"மனை விலங்கறு மைந்தனே கற்பகம் தணல் புனல் இம்மூன்றும்
தனையடைந்தவர் வறுமையும் சீதமும் தாகமும் தவிர்த்தாளும்,
அனையாஈசனும் தனையடைந்தவர்க் கருள்செய்வான்
[ அகன்றவர்க்கருள் செய்யான்
இனைய குற்றங்கள் எவர் குற்றமாகும் என்று நீ அறிவாயே"

என்பதே அப்பாடல்.

(3) காசிக்குச் செல்பவர்கள் கட்டாயம் முக்தி பெறுவார்கள் என்பது சந்நிதானங்களைப் பொருத்தவரையில் மெய்ப்பிக்கப் பெற்று வருகிறது. இது சந்நிதானங்களுக்குப் பெரும்பேருக அமைந்தாலும் சைவ சமயம், சைவ சமயிகள், சைவ மடம் ஆகியவைகளைப் பொருத்தவரையில் பேரிழப்பாக முடிந்து விடுகிறது. ஆகவே, சந்நிதானம் அவர்கள் எப்போதாவது காசிக்குச்செல்லத் திருவுளங்கொண்டால் அதைச் சிறிது காலத்திற்கு ஒத்திப்போடுவது நல்லது. சைவமும், தமிழும் தழைத்து இனிது ஓங்கட்டும். வணக்கம்.

தருமபுர மரபினன்.

[ஒ-ம்] கி. ஆ. பெ. விசுவநாதம்.

* * * *

M. SP. சண்முகம் புதுடெல்லி,
16 –11—71.

பணிவார்ந்த வணக்கம். சைவமும் தமிழும் வளர்க்கும் தனிப்பெருந் தருமை ஆதீன பீடத்தின் 26ஆவது மகாசந்நிதானமாகப் பட்டம் ஏற்கும் தங்களுக்குத் தமிழகம் மட்டிலுமின்றிச் சைவமும், தமிழும் வழங்கும் உலகில் எல்லாப் பகுதிகளிலும் சீரும் சிறப்பும் பேரும் புகழும் பெருகிப் பரவி உயரவேண்டுமென்று ஸ்ரீ மீனுட்சி சொக்கலிங்கப் பெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

தில்லியில் தருமை ஆதீனத்தின் அருள் ஒளி வீச்சல் வளர்ந்து அன்பும் பற்றும் கொண்டு வாழும் என் குடும்பத்தில் யாவருடைய பாராட்டுக்களையும் தங்களுக்குத் தெரிவிப்பதோடு, தில்லி நகர் சைவப்பேரவை, அருள்நெறி மன்றம் ஆகியவைகளின் பாராட்டுக்களையும் முறையே அவ்வச் சபைகளின் தலைவன், செயலாளன் என்ற முறையிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது 25 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் பக்தியிற் சிறந்து விளங்கியும், தம்மிடத்து அணுகியவர்களிடத்தில் தாயன்பு காட்டி அணைத்துச் சிறப்பித்தும், தன்னுடைய அருளாதரவால் தமிழகத்திற்கு அப்பால் தில்லியிலும் அதற்கு வெளியிலும் உள்ளவர்களையெல்லாமுங் கூடக் கவர்ந்தும் அருட்செங்கோலோச்சி வாழ்ந்து நாமெல்லாம் எதிர்பாராத நேரத்தில் பரிபூர்ணம்

அடைந்து விட்டார்கள். அது அவர்களுடைய அருளும், ஆதரவும் பெற்று நெருங்கி நின்ற எம்போல்வார்க்கு ஆற்றொணாத துன்பத்தையும், அதிர்ச்சியையும் அளித்தது. அவர்களுடைய தெய்வ சாந்நித்தியத்திற்குப் பணிவார்ந்த வணக்கத்தைச் செலுத்தியும் அந்த குருபீடத்திற்கு எழுந்தருளியுள்ள தங்கள் சிறந்த பண்பினை நினைந்தும் துயரை மாற்றிக்கொள்கிறேன்.

பேரருட் செல்வராக விளங்கிய அப்பெருந்தகையாளரின் அருள்நெறி வழியே பலகாலம் பயிற்சி பெற்றுநின்று, ஆற்றலும், அறிவும் திறனும் சிறந்திருக்கும் தன்மையை மெய்ப்பித்துத் தமிழகமெங்கும் தனக்கென ஒரு இடம் தேடிக்கொண்டு, அன்புச் செம்மலாய் விளங்கும் தாங்கள் 26 ஆவது தலைவராகப் புகழ் பெற்ற தருமைப் பீடத்திலெழுந்தருளுவதால் முந்திய முதல்வர் நடத்திய அறச்செயல்களெல்லாம் தொடர்ந்து குறைவின்றி நிகழுமென்றும், அவர்கள் மனதில் திட்டமிட்டுவைத்த அறங்களுங்கூட எதிர்காலத்தில் செயல் வடிவம்பெறும் என்றும் சைவமும் தமிழும் திருக்கோயில்களும் தங்கள் காலத்தில் மேன்மேலும் வளர்ந்து ஆதீனத்தின் புகழும் உயரும் என்றும், நம்பிக்கையுடையவர்களாக இருந்து அதற்குப் பிரார்த்திக்கிறோம்

திருவருள் உறுதியாக யாவற்றுக்கும் துணை நிற்கும்

* * * *

கீ. நச்சினூர்க்கினியசிவம், திி. நகர்,

சிவ. மீனாட்சிசுந்தரசிவை, 13—11—71.

தாங்கள் தருமைத்திருமடத்தின் தலைமையேற்று விளங்கும் செய்தியறிந்து உளம் பூரித்தோம். " நம் சுவாமிகள் பண்டார சந்நிதிகள் ஆய்விட்டார்கள் " என்று நாங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரிடமும் ஆராவாரித்துக்கூறி அகமகிழ்ந்து துளும்பினோம். இங்கு வீட்டிலும், பிரசார நிலைய அன்பர்கள் கூடும் போதும் மகிழ்ச்சிப்பெருக்கில் மூழ்கி வருகிறோம்.

தாங்கள் இப்பெரும் பதவிக்கு வருவது இன்றியமையாதது என்று முன்னமே தெரிந்திருந்தாலும், தாங்கள் அத்திருப் பீடத்தில் எழுந்தருளிய செய்தி கேட்ட பின்பே அனைவருக்கும் அகத்தே உவகை ஊற்றெடுக்கப்பெற்றோம்.

இத்திருப்பெரும் பதவியில் தாங்கள் பன்னெடுங்காலம் விளங்கி, சைவத்திருநெறிக்கும், தண்தமிழ்த்திருமொழிக்கும் ஆன நலம் பலவும் புரிந்தருளவேண்டுமென இறைஞ்சுகிறோம்.

T. V. KAMALASWAMY B. A., Madras - 17,
Manager & Correspondent, 23—11—71.
T. Nagar High School.

கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாகச் சென்னை, தியாகராய நகரில் விளங்கும் தருமையாதீனக் கிளையான அறநிலையத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரானாக இருந்து தாங்கள் செய்து வந்துள்ள சமயப் பணிகளை நல்லோர் அறிவர்; நாடறியும்.

இந்து சமயங்களாக இன்று விளங்கும் சைவம் வைணவம் ஆகிய இரு சமயங்களின் வளர்ச்சிக்கும் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் வளர்ச்சிக்கும், தக்க சமயப் பெரியோர்கள், பிற சான்றோர்கள் ஆகியோர்களை அழைத்து கௌரவிக்கும் வகையி லும் தாங்கள் சென்னை மக்களின் நன்மதிப்பையும் அன்பையும் பாராட்டையும் வெகுவாகப் பெற்றுத் திகழ்ந்தீர்கள்.

சமயப் பிரசாரம் என்னும் வகையில் வார வழிபாடு என வகுத்துக்கொண்டு சென்னையைச் சார உள்ள திருத்தலங்களில் கோயில் கொண்டுள்ள இறைவனுக்குச் சிறப்புப் பூசை வழி பாடுகள் தமிழ் மறைகளாம் தேவாரம், திருவாசகம்,பிரபந்தங்கள் ஆகியவை முழங்கச் செய்துள்ளீர்கள். தமிழ் இலக்கிய இலக் கணத் தெளிவும், சித்தாந்த நிறைவும் ஒருங்கே பெற்றுள்ள தாங்கள் தருமையாதீனத்தில் 26 ஆவது குருபீடமாக அமர்ந்தது மிக மிகப் பொருத்தமும் தகுதியும் உடையதாகும்.

சமயக் கருத்துகளைப் பள்ளி மாணவர்களிடைப் பரப்ப தாங்கள் விஜயம்செய்து சொற்பொழிவாற்றி மாணவர் உள்ளங் களிலும் இடம் பெற்றுள்ளீர்கள்.

தங்கள் தலைமையில் சமயம், தமிழ், பொதுநலச் சேவை, அறப்பணிகள் ஆகியவை முதலிடம்பெற்றுச் சீரோடும் சிறப் போடும் விளங்குக எனத்திருவருள் துணையுடன்வாழ்த்துகிறேன்.

* * * *

G. K. PERIASWAMI Tirupur - 1,
12—11—71.

தாங்கள் தருமபுரம் ஆதீனத்தின் 26-வது மகாசந்நிதான மாகப் பொறுப்பேற்றிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி அடை கிறேன். தாங்கள் சிறந்த ஆலய நற்பணிகள் பலபுரிந்து நல்லாசி வழங்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

# செய்திகள்

## தருமையாதீனத்தில் ஆவணிமூலத் திருநாள்

தருமையாதீனத் திருமடத்தில் வழக்கம்போல் இவ்வாண்டும் ஆவணிமூலத் திருநாள் 18, 19, 20—8—72 வெள்ளி, சனி ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் மிகச்சிறப்பாக நிகழ்ந்தேறியது. தருமையாதீன அருளாட்சியில் தழைத்து வரும் ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும் ஆவணிமூலத் திருநாளை ஒட்டி நடைபெற்றன.

### சங்க இலக்கியத் திருநாள்

18—8—72 வெள்ளிக்கிழமையன்று மாலை 3 மணி அளவில் வேத சிவாகம பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி இவற்றின் ஆண்டுவிழா, சங்க இலக்கியத் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது கடலூர், அரசினர் கலைக்கல்லூரித் துணைப்பேராசிரியர். வித்துவான். திரு. இரா. இராமானுசம், எம். ஏ., அவர்கள் 'நக்கீரர் நற்றமிழ்' என்பது பற்றியும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் 'வள்ளுவர் செந்தமிழ்' என்பது பற்றியும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியை வித்துவான். திருமதி. ப. நீலா அவர்கள் 'ஔவை அருந்தமிழ்' என்பது பற்றியும் உரைநிகழ்த்தினர். தொடக்கப்பள்ளி மாணவ மாணவியரால் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பெற்றன.

### காப்பியத் திருநாள்

19—8—72 சனிக்கிழமையன்று மாலை 3 மணி அளவில் தேவாரப்பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி இவற்றின் ஆண்டுவிழா, காப்பியத்திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. சென்னை, தருமையாதீனப்பிரசார நிலையம் வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் சிறப்புரை ஆற்றினார்கள். ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், புலவர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள், 'வீரத்தின் விளைவு' என்பது பற்றியும் புலவர். திரு. அறிவுடை நம்பி, எம். எல். சி., அவர்கள் 'கற்பின் கொழுந்து' என்பது

பற்றியும் உரை நிகழ்த்தினர். உயர்நிலைப்பள்ளி மாணவியரால் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு வில்லுப்பாட்டாகப் பாடப்பெற்றது.

## ஆவணிமூலத் திருநாள் : சிறப்பு வழிபாடு

20—8—72 ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆதீன ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. குன்றக்குடி திருவண்ணாமலையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், சைவப் பெருமக்கள் பலரும் வழிபாட்டில் கலந்துகொண்டனர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் அன்பர்களுக்கு ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் திருவருட் பிரசாதம் வழங்கியருளினார்கள். விழாமலராக 'சித்தாந்த சைவ வினா விடை' என்னும் சாத்திர நூல் வெளியிட்டு அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது.

## பட்டமளிப்பு விழா

ஆவணிமூலத் திருநாளன்று மாலை 7 மணியளவில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் சந்நிதியில், சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர், திரு. பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, எம். ஏ., எல். டி., அவர்களுக்கு, அவர்தம் மொழி, இலக்கியக் கல்விப் பணிகளை ஊக்குவிக்கும் நோக்கொடு, 'மும்மொழிக்கொண்டல்' என்னும் சிறப்புப் பட்டம் பொறிக்கப்பெற்ற பொற்பதக்கம் வழங்கிப் பொன்னாடை போர்த்து ஆசீர்வதித்தார்கள்.

## ஆதீனப் பல்கலைக் கல்லூரி ஆண்டுவிழா

20—8—72 இரவு 7 மணி அளவில் ஆதீனப் பல்கலைக் கல்லூரியின் ஆண்டு விழா சமய இலக்கியத் திருநாளாகக் கொண்டாடப்பெற்றது.

திரு. வேலாயுத ஓதுவாமூர்த்திகள் இறை வணக்கம்பாட, வித்துவான். தவத்திரு. மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், ஆவணிமூலத் திருநாளின் சிறப்பையும், பட்டம் பெற்ற மும்மொழிக்கொண்டல் அவர்களின் நன்முயற்சியையும் பாராட்டி ஆசியுரை வழங்கியருளினார்கள். (ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆசியுரை இவ்விதழின் 584-ஆம் பக்கத்தில் தனியே வெளியிடப்பெற்றுள்ளது.)

தருமையாதீன அருளாட்சியில் தழைத்துவரும் பல்வேறு கல்வி நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளை அவ்வந் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பினர் படித்த பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள், கல்வி நிலைய மாணவ மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கி ஊக்குவித்தருளினார்கள்.

அடுத்து, அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், செஞ்சொற்கொண்டல், திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., அவர்கள் பட்டம் பெற்ற திரு. பிள்ளை அவர்களைப் பாராட்டிப் பேசியதோடு திருவாசகத்தேன் என்ற பொருள் பற்றிச் சில கருத்துக்களை விளக்கினார்.

திரு. பிள்ளை அவர்கள், தமக்களிக்கப் பெற்ற சிறப்புக்களுக்கு உரிய வகையில் நன்றி தெரிவித்து உரையாற்றினார்கள். (அவர்கள் உரைச் சுருக்கம் இவ்விதழின் 598 ஆம் பக்கத்தில் தனியே வெளியிடப்பெற்றுள்ளது)

இறுதியாகத் திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சிறப்புரையாற்றியபின், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் நன்றி கூற, வாழ்த்தொடு இரவு 9-45 மணி அளவில் விழா நிகழ்ச்சிகள் இனிதே நிறைவெய்தின.

மாயூரம், சிதம்பரம் மற்றும் சுற்றுப் புறங்களிலிருந்து சைவப் பெருமக்களும், மாணவர்களும் நிறைந்த அளவில் கலந்துகொண்டு விழாப் பயன் கொண்டனர்.

## திருவாவடுதுறை ஆதீனம்
## ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம்

அம்பிகை பசு உருவாய் இருந்து இறைவனை வழிபட்டு அருள் பெற்றதும், ஞானசம்பந்தருக்கு இறைவன் உலவாக்கிழி அளித்தருளியதும், திருமூலர் இருந்து தவம் பெருக்கித் திருமந்திர நூலை வழங்கியருளியதும், திருமாளிகைத் தேவர் முதலிய சித்தர்கள் வாழ்ந்து பல்வகைச்சித்துக்கள் கைவரப் பெற்றதும் ஆகிய திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் 27—8—72 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மிகச்சிறப்பாக நடைபெற்றது. திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெரும்பொருட் செலவில் திருப்பணிகள் நிறைவித்து மகாகும்பாபிஷேகம் செய்வித்தருளினார்கள்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு. கிருஷ்ணசாமி ரெட்டியார், திரு. மீ. ப. சோமசுந்தரம், திரு. O. V. அளகேசன், திரு. பா. நடராசன், திரு. கருப்பையா மூப்பனர் முதலிய பெருமக்கள் வருந்திருந்து கும்பாபிஷேக விழாவைத் தரிசித்து இன்புற்றனர்.

அகில இந்திய வானொலியின் திருச்சி நிலையத்தாரால் மகா கும்பாபிஷேக நேர்முக வருணனை செய்யப்பெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மகாகும்பாபிஷேக விழாவைச் சிறப்புற நிகழ்த்திய திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் பாராட்டியும் அன்பர்களுக்கு வாழ்த்துரை கூறியும் மகாகும்பாபிஷேக விழா மலரை வெளியிட்டும் அருளுரை நிகழ்த்தியருளினர்கள்.

---

குறிப்பு :- பெண்ணாகடத்திற்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியது பற்றிய விரிவான செய்தி அடுத்த இதழில் வெளிவரும்.

---


## " ஞானசம்பந்தம் "

அரியகட்டுரைகளுடன்வெளிவரும் தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்துத் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

| | | | |
|---|---|---|---|
| ஞானசம்பந்தம் ஆயுள் சந்தா | ... | ரூ. | 100—00. |
| ,, உள்நாடு | ... | ரூ. | 4—00. |
| ,, வெளிநாடு | ... | ரூ. | 6—00. |

செயலாளர்,

ஞானசம்பந்தம் அலுவலகம்

தருமபுரம், மாயூரம் P. O.

தஞ்சை மாவட்டம்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

**திரு. K. முத்துஜோதிடர்**

( பரிதாபிஞூ புரட்டாசிமீ 1உ முதல் 30உ முடிய )

( 17—9—72 முதல் 16—10—72 முடிய )

பரிதாபிஞூ ஆவணிமீ 31உ சனிக்கிழமை மூல நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதையாதி 35 நாழிகை 4 வினாடிக்கு லோக ரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் மேஷ லக்கினத்தில் சிம்ம ராசியிலிருந்து கன்னியாராசி பிரவேசம் இரவு முதல் யாமத்தில் செய்கிறார். அதன் பலன் உலகம் செழிக்கும். சுபிக்ஷமடையும். எங்கும் தர்மபூமிகளெல்லாம் சுகமாகும். தக்ஷிண பாரதத்தில் காவேரி தீரமும், சோழவள நாடும் தான்யவிருத்தியைத் தரும். புரட்டாசிமீ 15உ முடிய கன்னியாராசியில் கன்னிச்செவ்வாய் என்னும் பேருடன் புதாங்காரக யோகமும், சூரிய சம்பந்தமும் சுக்கிரன் பின் தங்கியும், தனுர், மிதுனத்தில் ராகு கேது சஞ்சாரமும் இருப்பதால் அநேக பூமிகளில் துர்பிக்ஷத்தைத்தரும். மழைக் குறைவால் சில இடங்களும் அதிக மழையாலும் காற்றாலும் சில பிரதேசங்களும் பாதிக்கப்படும். ஆதிக்க பலத்தால் அதர்ம அசத்தியங்கள் ஓங்கும். அதனால் பல இடங்களில் அமைதிக் குறைவும், துர்மரணங்களும், இயற்கைக் கோளாறுகளும் ஏற்படாமல் இருக்க ஒவ்வொரு புண்ணிய பூமிகளிலும் மகாயக்ஞங்கள் நடத்தவேணும். கடவுள் காப்பார். தர்மமே ஜயம்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமாகவே நடக்கும். தனதான்ய விருத்தியும், ஜீவன விருத்தியும் இல்லற சுகமும் அதிகமாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். தெய்வபலம் பிரகாசிக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். ஜீவனம் அடிக்கடி மாறுதல் அடையும். குடும்பத்தில் செலவுகள் அதிக மாக இருக்கும். எல்லாக் காரியங்களும் தவக்கத்தோடும் தெய்வ பலத்தோடும் நடக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமாகச் சுபமான பலனையே தரும். சகல காரியங்களும் சித்தியாகும். புதிதாகச் சில காரியங் கள் ஆரம்பமாகும். தூரதேசத்தில் இருந்து வாழ்த்துக்கள் வந்துகொண்டு இருக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாகச் சுபமான பலனைத்தரும். புதிதாகப் பல ஸ்தாபனங்கள் ஏற்படும். விவசாயம் அதிகமாகும். தான்ய விருத்தியாகும். நஷ்டமான பொருள் வந்து சேரும். உலக பிரசித்தியும், கீர்த்தியும் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். தொழில் ஓங்கும். குடும்பம் தழைக்கும். மேலோர் பெரியோர்களின் அன்பும், கீர்த்தி பத்திரமும் கிடைக்கும். ஆரோக்யம் உண்டு பண்ணும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.

கன்னியாராசி 9 பாதங்களும் பூர்ணமாகச் சுபபலனைத் தரும். உத்தியோகத்தில் மேல் பதவிகளும், ஸ்வயமான அதிக வியோக மும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும் விருத்தியாகும். புதன், வியாழன் சுபமாகும்.

7, துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும், சுபமான பலனைத்தரும். தெய்வ பக்தியும், குருபக்தியும் அதிகமாகும். புண்ணிய பலன்கள் கிடைக்கும். எதிர்பாராத அநேகவிதமான நன்மைகள் தாகுக

வந்து சேரும். சந்தோஷம் உண்டுபண்ணும். வெள்ளி, சனி சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாக இருக்கும். அதிகமான தொல்லைகள் ஏற்பட்டுக் கவலை உண்டுபண்ணும். எல்லாக் காரியங்களும் சிரமப்பட்டுச் சாதிக்க முடியும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

9 தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். புத்திர பௌத்திராதிகளால் நன்மை உண்டாகும். குடும்ப சுகம் அதிகமாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். மனம் சாந்தி அடையும். சிநேகிதர்களாலும், உறவினர்களாலும் நன்மை உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

10. மகரம்–உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½


மகரராசி 9 பாதங்களும், பூர்ணமாகச் சுபபலனைத் தரும். உத்தியோகத்தில் மேல்பதவிகளும், கீர்த்தியும் கிடைக்கும். அடிக்கடி சஞ்சாரம் அதிகமாகும். இல்லற சுகம் அதிகமாகும். கிரக பூமி லாபங்கள் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ சதயம் –பூரட்டாதி–¾,

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். அதிக உழைப்பினால் சகலமும் சாதிக்க முடியும். ஆரோக்யம் தரும். நஷ்ட தனம் தானாகச் சேரும். மனம் சாந்தம் அடையும். சனி, ஞாயிறு சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். சத்ருக்கள் சரண் அடைவார்கள். விவகாரம் ஜெயிக்கும். உலகில் எங்கும் கீர்த்தி உண்டாகும். ஆரோக்யம் தரும். புதிதாக வஸ்திராபரணங்கள் சேரும். ஸ்ரீதேவியின் அருள் உண்டாகும்.



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜைத் திருநாள் 29—10—72